இலவச பிரதி
Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-12 | 27-12-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-312

உங்கள் நிறுவனங்களின்
உள்ளக தொலைபேசி
இணைப்புக்களுக்கு...

கிளிநொச்சியில்
அதிக நிறுவனங்களுக்கு
உள்ளகத் தொலைபேசி
இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.

நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்
இல:52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல: 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653(சி-13518)

## - ஆயிரக்கணக்கில் மக்களைக் காவுகொண்ட -

# சுனாமி அனர்த்த நினைவு நாள் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் உணர்வு பூர்வ அனுஷ்டிப்பு

## நினைவாலயங்கள், நினைவுத்தூபிகள் திறப்பு

(நமது நிருபர்)

**தமிழர் தாயகத்தில் கடந்த ஆண்டு சுனாமிப்பேரலை காவு கொண்ட தமிழ் மக்களின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தமிழர் தாயகமெங்கும் நேற்று உணர்வுபூர்வமாக பொதுமக்கள், போராளிகளால் அனுஷ்டிக்கப்பட்டது.**

கடந்த ஆண்டு சுனாமிப் பேரலையின் தாக்கத்தினால் உயிரிழந்த மக்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள் தமிழர் தாயகமெங்கும் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டன.

ஆழிப்பேரலையினால் உயிரிழந்தவர்களின் நினைவாக நினைவுத் தூபிகள், நினைவாலயங்கள் என்பன திறந்து வைக்கப்பட்டதோடு, கோயில்களிலும் தேவாலயங்களிலும் விசேட பூசைகளும், ஆராதனைகளும் இடம்பெற்றன. அத்தோடு இதன்போது உயிரிழந்த மக்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களில் சமநேரத்தில் மௌன வணக்கம் செலுத்தப்பட்டு சுடர்ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. வடமராட்சி கிழக்கில் உயிரிழந்த மக்களின் முதலாம் ஆண்டினை நினைவுகூரும்முகமாக உடுத்துறையில் அவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. இங்கு அம்மக்கள் அனைவரை

(12ஆம் பக்கம் பார்க்க)



(முல்லைத்தீவில்...)

படம்:- தவரட்ணம்

## கேணல் கிட்டுப் பூங்காவை சிதைத்து தீயிட்டது ராணுவம்

நல்லூர் முத்திரைச் சந்தியிலுள்ள கேணல் கிட்டுப் பூங்கா சிறிலங்கா இராணுவத்தினரால் சிதைக்கப்பட்டுள்ளது. அங்கு வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு அவர்கள் உட்பட ஏனைய பத்து வேங்கைகளினதும் திருவுருவப் படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

இந்தத் திருவுருவப் படங்களும் முத்திரைச் சந்தியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் அடித்து உடைக்கப்பட்டு சிதைக்கப்பட்டுள்ளன. திட்டமிட்ட முறையில் இதனை அடித்துடைத்த இராணுவத்தினர் படங்களை எடுத்துச் சென்று வேறு இடத்தில் வைத்துத்தீயிலிட்டுள்ளனர். கிட்டுப் பூங்காப் பகுதிக்குச் சென்ற ஊடகவியலாளர்களையும் முத்திரைச்சந்தி முகாமில் தங்கியுள்ள இராணுவத்தினர் தாக்கியுள்ளனர். படங்கள் அடித்துடைக்கப்பட்டிருப்பதை படம் எடுக்கவிடாமல் அப்பகுதியில் இராணுவத்தினர் சுற்றி வளைத்துள்ளனர். இதன் காரணமாக ஊடகவிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாமனிதர் ஜோசப்பரராசசிங்கத்திற்கு கரடியனாறில் மக்கள் அஞ்சலி

### -நாளை கிளிநொச்சியில் புகழுடல் அஞ்சலிக்காக வைக்கப்படும்

மட்டக்களப்பு கரடியனாறில் நேற்றுப் பிற்பகல் மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், மட்டக்களப்பு மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, தளபதி பிரபா, தளபதி ஜெயாத்தன் உட்பட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தியுள்ளனர்.

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் புகழுடல் நாளை கிளிநொச்சி பண்பாட்டுமண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. நாளை வவுனியாவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்படும் புகழுடல் பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சியில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

தொடர்ந்து முல்லைத்தீவுக்கு மக்கள் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படும். அதன் பின்னர் இறுதி நல்லடக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் மீது துப்பாக்கிச் சூடு

அக்கரைப்பற்றில் சதீஸ்குமார் (வயது- 24)என்ற இளைஞர் மீது நேற்றுதிங்கட்கிழமை மாலை துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நகரிலிருந்து 58 கிலோமீற்றர் தென்திசையில் உள்ள அக்கரைப்பற்று பிஸ்தார் வீதியில் மாலை 5.30 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது.

துப்பாக்கிச்சூடு நடத்தியோர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் நேற்று அரச உத்தியோகத்தர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்

யாழ். இல் நேற்று திங்கட்கிழமை அரச உத்தியோகத்தர்கள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தினர்.

தமக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை உலகுக்குத் தெரியப்படுத்தும் வகையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

அரச உத்தியோகத்தர்களின் வேலைப் புறக்கணிப்பினால் யாழ்ப்பாணத்தில் அனைத்து அரச செயற்பாடுகளும் முடக்கப்பட்டன.

யாழ்.குடாநாட்டில் அரச ஊழியர்கள் உட்பட மக்கள் படையினரால் தாக்கப்படுவதை கண்டித்து இப் போராட்டம் நடைபெற்றது.

இதன் காரணமாக அலுவலகங்கள் முழுமையாக மூடப்பட்டன.

யாழ்ப்பாணத்திலுள்ள அரச அதிபர் செயலகம், பிரதேச செயலகங்கள்,நீதிமன்றங்கள், வங்கிகள்,

(12ஆம் பக்கம் பார்க்க)

## கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு திமிலைத்தீவில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை சிறிலங்கா பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் எம்.கருணாரத்ன (வயது -42) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வாழைச்சேனையில் இரு இளைஞர் இராணுவத்தால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை சந்திவெளியில் வைத்து இரண்டு தமிழ் இளைஞர்களை சிறிலங்கா இராணுவம் நேற்று சுட்டுக்கொன்றுள்ளது.

இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோதே இந்த இளைஞர்களை இராணுவம் சுட்டுக்கொன்றதாக ஏறாவூர் பொலிசார் கூறியுள்ளனர்.

இதேவேளை இந்த இளைஞர்களின் உடல்கள் அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## யாழ்.குடா நாட்டில்4இடங்களில் படையினர் மீது கைக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நான்கு இடங்களில் படையினர் மீது கைக்குண்டு வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகத் தெரியவருகின்றது.

தட்டாதெருச்சந்தி படை நிலை மீது கிரனைட் தாக்குதல் சம்பவமும் கைலாசபிள்ளையார் ஆலயச் சூழலில்அமைந்துள்ள படை முகாம் மீதுகைக்குண்டு வீச்சுடன் துப்பாக்கிச்சூட்டு சம்பவமும் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது.

இச் சம்பவம் இடம்பெற்றவேளை பல்வேறு படையினரின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில்பூப்பறித்த தமிழ்இளைஞர்கள் கைது

கொழும்பில் சிறிலங்கா விமானப்படைத் தலைமை அலுவலகத்திற்கு அருகிலுள்ள பிரதான விடுதிக்குப் பக்கத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் எதிர்வரும் இரண்டாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிமன்ற பதில் நீதிபதி மொஹமட் இஸ்தீன் உத்தரவிட்டுள்ளார். வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த ஆறுமுகன் கமலதாசன், மாரிமுத்து பெரியராமன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ள நபர்களாவர்.

# முதலாம் மாத நினைவினில்

பிறப்பு
26 - 05 - 1980



வீரச்சாவு
27 - 11 - 2005

## கப்டன் செவ்வீரன்

### பொன்னுத்துரை கிரிதரன்

சொந்த முகவரி :- பிரதான வீதி, உவர்மலை, திருகோணமலை.
தற்போதைய முகவரி:- நாதன் குடியிருப்பு,புன்னைநீராவி, விசுவமடு, முல்லைத்தீவு.

படரும் விழிகளின்
பார்வையில் படமாய் - இந்த
புண்ணிய ஈழப்
பூமியின் திடமாய்
விடுதலைத் தேரின்
வீரிய வடமாய் - என்றும்
தெரியாய்ப் பயணத்
தெளிவின் நடமாய்
விழிக்கா விழியின்
விழித்திர உரமாய் - எங்கள்
நினைவுகள் பெற்ற
நித்திய வரமாய்

உதவா சிந்தனை
ஒதுக்கும் முரமாய் - யார்க்கும்
துயரின் வலியைத்
துடைக்கும் கரமாய்
எங்கள் நினைவுகளிலும்
நிகழ்வுகளிலும்
நினைத்து எங்கள் நண்பனே
காவியத் தலைவன் - எங்கள்
காரியத்தலைவன்
காலடி தொடர்வோம் - உன்
கனவுகள் வெல்வோம்.

(7190)

-போராளி நண்பர்கள்.

---

# முக்கிய அறிவித்தல்

## வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2005

எதிர்வரும் 2005.12.31 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பரந்தனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதினால் உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், சாரதி/நடத்துனர்களையும் தவாறது இப்பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர்
கோ.கஜேந்திரசிங்கம்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

செயலாளர்,
சி.இரத்தினாகரன்
வ.பி.பா.ஊ.கூ.சங்கம்
பரந்தன்.

(சி.13631)

---

# வரிவிளம்பரம்

### புதிய கணினி வகுப்புகள் ஆரம்பம்

(K.S.K கணினி நிலையம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு) E.C.E(O/L) எழுதிய மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான MS-OFFICE வகுப்புகள் ஆரம்பம்:-27,28.12.2005 மாலை 5.00 மணி காலம்:- 03 மாதங்கள் வகுப்பு நாட்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் இரண்டு மணித்தியாலங்கள் வீதம் நடைபெறும். பயிற்சி முடிவில் அரச அங்கீகாரமும் சர்வதேச அங்கீகாரமும் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் நிர்வாகி. (7180)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதியில் அரை ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S.ஜெகநாதன் மத்தியகல்லூரி முன் மீனாட்சி அம்மன் வீதி,கிளிநொச்சி. T.P 077-9063571 (7188)

### விற்பனைக்குண்டு

L.G.குளிர் சாதனப்பெட்டி இரண்டு கதவுள்ளது ஓப்சட் பிரிண்டின் மிசின் A.B.Dick 350 Size G.T.O 18x10 தொடர்புக்கு T.யோகேஸ்வரன் 154ஆம் கட்டை திருமுறிகண்டி, செல்வபுரம். (7178)

### தவறவிடப்பட்டது

அன்பு அச்சக வரவுத்துண்டு (பொத்தக எண் -51) ஒன்று சிறுகைப் பையுடன் வருவாய்ப்பகுதிக்கும், டிப்போச்சந்திக்கும் இடையில் 2005.12.23 ஆம் நாள் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் அல்லது அன்பு அச்சகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகிறோம். தகுந்த வெகுமதி வழங்கப்படும். (7179)

### இறப்பர் முத்திரை

இறப்பர் முத்திரை கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும். பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி கிளிநொச்சி.T.P 2285750 (சி-13263)

### காணவில்லை

வட்டக்கச்சி கட்சன் வீதி விப்பு என்பவருடைய மாடு (வெள்ளை எருது) குறி S.V புதுநலக்குறி கடந்த சில தினங்களாக காணவில்லை கண்டவர்கள் விப்பு 797 கட்சன் வீதி எனும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும், சன்மானம் வழங்கப்படும். (6448)

### விற்பனைக்குண்டு

5ஆம் கட்டை, அளம்பில் முல்லைத்தீவில் 49 ஏக்கர் தென்னந் தோட்டக்காணி விற்பனைக்குண்டு தொடர்பு-காந்திமதி சிதம்பரப்பிள்ளை மே/பா சி.சிவசுப்பிரமணியம், 5ஆம் வட்டாரம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு. (6967)

### ஆங்கிலப்பேச்சு வகுப்பு ஆரம்பம்

இது O/L பரீட்சை எழுதியவர்களுக்கான ஆங்கிலப்பேச்சு வகுப்பு:- ஆசிரியர் - இ.றஜித், காலம் 28.12.2005 நேரம் காலை 9 மணி இடம் வைத்தியசாலை அருகில் முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு. (7185)

---

# நூல் அறிமுக விழா

கலாநிதி அன்ரன்பாலசிங்கம் அவர்களின்

## "போரும் சமாதானமும்"

விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாறு

நூல் அறிமுக விழா

இடம்:- பண்பாட்டு மண்டபம் கிளிநொச்சி.

காலம்:- 2005.12.31, நேரம்:- காலை10.00 மணி.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நூல் அறிமுகவிழா ஏற்பாட்டுக்குழு,
நிதித்துறை.

(சி-13630)

# ஆழிப்பேரலை அழிவு ஏற்பட்ட நாடுகளில் ஓராண்டு நினைவு நிகழ்வுகள்

**ஆழிப்பேரலை அழிவு ஏற்பட்ட நாடுகளில் காவுகொள்ளப்பட்டவர்களுக்காக ஓராண்டு நினைவு நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. ஆழிப்பேரலையால் மொத்தம் இரண்டு இலட்சத்து 23 ஆயிரம் பேர் பலியாகி இருந்தனர்.**

இந்தோனேஷியாவின் ஆச்சேயில் ஆழிப்பேரலை நடந்த நேரம் நினைவு கூரல் நேரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

அவ்வேளையில் ஆழிப்பேரலை எச்சரிக்கைக ளுக்கு வைக்கப்பட்ட கருவி அபாய ஒலியை எழுப்பி ஒய ஒரு நிமிட நேரம் காவு கொள்ளப்பட்ட உயிர்களுக்காக மக்கள் வணக்கம் செலுத்தினர்.

இந்தோனேஷிய சனாதிபதி ஆழிப்பேரலையில் இறந்தோருக்கு வணக்கம் செலுத்தினார்.

தாய்லாந்தின் பட்டோன் கடற்கரையோரம் உட்பட பல இடங்களில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் அமைச்சர்கள் உட்பட பெருமளவான மக்கள் கலந்து கொண்டு பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

அவுஸ்திரேலியாவில் இருந்து தாய்லாந்துக்குச் சுற்றுலா சென்ற போது சுனாமி அனர்த்தத்தில் பலியானவர்களின் உறவினர்களும், தாய்லாந்தில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

தமிழக கடலோரப் பகுதிகளிலும், ஆழிப்பேரலைகளில் காவு கொள்ளப்பட்டோருக்கான நிகழ்வுகள் நடைபெற்றன.

பல்வேறு அமைப்பினரும் மக்களும் இதற்கான ஒழுங்குகளை செய்திருந்தனர். இந்த ஆழிப் பேரலைத் தாக்குதலில் சென்னை, கடலூர் நாகை கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களுமே பெரும் பாதிப்புக்களைச் சந்தித்தன. அங்கு காவு கொள்ளப்பட்டோருக் கான நிகழ்வுகளில் மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வுகளையொட்டி மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்லவில்லை. கடற்கரையில் பட்டுகளை நிறுத்த கறுப்புக்கொடிகளை ஏற்றியிருந்தனர்.



தமிழகத்தில் ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டோருக்கு உறவினர்கள் அஞ்சலி செலுத்தும் காட்சி.

## போர்த்துக்கல்லில் பேருந்து கவிழ்ந்து ஐந்து சுற்றுலாப் பயணிகள் பலி

(பன்சால்)

போர்த்துக்கல் நாட்டிலுள்ள மாட்பிரா தீவுக்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்து சுவர் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஐந்து சுற்றுலாப் பயணிகள் பலியானார்கள். மேலும் 52 பேர் படுகாயமடைந்தார்கள். இவர்களில் 17 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

யப்பானியர்களைக் கடத்திய விவகாரம் தீரும்வரை

## யப்பான் -வடகொரிய உறவுநிலை இயல்பு நிலைக்குத் திரும்பாது

யப்பான் அறிவிப்பு

(டோக்கியோ)

வடகொரியா கடந்த காலத்தில் யப்பானியர்களைக் கடத்திச் சென்றமை தொடர்பாக உள்ள பிரச்சினை தீர்க்கப்படும் வரை அந்த நாட்டுடனான உறவுகள் இயல்பு நிலைக்குத் திரும்பமாட்டாது என்று யப்பான் தெரிவித்துள்ளது.

வடகொரிய உளவாளிகளுக்கு பயிற்சியளிக்கும் முகமாக 1970 களிலும், 1980 களிலும், யப்பானியர்கள் சிலர் வடகொரியாவினால் கடத்திச் செல்லப்பட்டனர்.

கடந்தவார இறுதியில் இரு நாட்டு முக்கியஸ்தர்களிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது இரு நாடுகளும், இராஜதந்திர முயற்சிகளை ஆரம்பிக்க இணங்கியிருந்தன.

எனினும், ஒரே சமயத்தில் இந்த ஆட்கடத்தல் விவகாரம் மற்றும் வடகொரியாவின் அணுவாயுத ஏவுகணைத் திட்டம் என்பன குறித்தும் ஆராயப்படவுள்ளன.

எதிர்காலப் பேச்சுக்களுக்கான புதிய வழிமுறைகள் பற்றிக் கவனம் செலுத்தப்படுகின்ற போதிலும், இந்த ஆட்கடத்தல் விவகாரத்தில் யப்பானின் நிலைப்பாடு மாற்றமடையவில்லை என்று யப்பானின் பிரதம அமைச்சரவை செயலாளர் தெரிவித்தார்.

யப்பான் வடகொரியாவிடம் 2002 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் உறவுகளை வழமையாக்குவதற்கான பேச்சுக்களை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


## அமெரிக்காவில் 50 வருடங்களின் பின் பெண்ணுக்கு மரண தண்டனை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 50 வருடங்களுக்குப் பின்பு ஒரு பெண்ணுக்கு அண்மையில் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அஞ்சலாஜாண்சன் என்ற பெண்ணுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை அமெரிக்கன் பெடரல்கள் நீதிமன்றம் அண்மையில் நிறை வேற்றியது.

ஐந்து பேர்களைக் கொலை செய்த வழக்கில் போதை மருந்து வியாபாரியுடன் சேர்த்து இவருக்கு மரணதண்டனை 1993இல் வழங்கப்பட்டது. தன்னைப் பற்றிய உண்மைகளைத் தெரிவித்து விடுவார்களோ எனப் பயந்து ஐந்து பேரை மருந்து வியாபாரி கொன்றுள்ளார். இதற்கு அஞ்சலா துணை இருந்துள்ளார்.

அமெரிக்காவில் இதற்கு முன்பு கடைசியாக 1953ஆம் ஆண்டில் ஒரு பெண்ணுக்குத் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பின்பு இப்போது தான் ஒரு பெண்ணுக்குத் மரண தண்டனை நிறைவேற்றப்படுகின்றது.



யப்பானில் கிறிஸ்துமஸ் திருவிழாவையொட்டி சொனி நிறுவனம் புதிய வகை நடமாடும் ரோபோக்களை அறிமுகம் செய்துள்ளது.

## நேபாளத்தில் 39 மாணவர்கள் கைது

(காத்மண்டு)

நேபாளத்தில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஜபா மாவட்டம் பத்ராபூர் நகரில் ஏழு எதிர்க்கட்சிகளுடன் இணைந்த மாணவர் சங்கத்தினர் அரசை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாகர்கோட் என்ற இடத்தில் இராணுவ வீரர் ஒருவர் சுட்டத்தில் 11 அப்பாவிகள் பலியானதற்கு கண்டனம் தெரிவித்து இந்தப் போராட்டம் நடந்தது. போராட்டம் நடத்திய மாணவர்களில் 39பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## பனியால் புகையிரதம் தடம்புரண்டது; யப்பானில் 4 பேர் பலி; 33 பேர் காயம்

(டோக்கியோ)



யப்பானில் கடுமையான பனிப்பொழிவில் சிக்கி நேற்று அதிவேக புகையிரதம் தடம் புரண்டதில் நான்கு பேர் பலியாகியுள்ளனர். 33 பேர் படு காயமடைந்துள்ளனர்.

டோக்கியோ நகருக்கு வடக்கே 300 கிலோ மீற்றர் தொலைவில் இந்தப் புகையிரத விபத்து இடம்பெற்றுள்ளது. தண்டவாளம் தெரியாத அளவுக்கு கடும் பனி பொழிந்திருந்ததாகவும், அத்துடன் கடும் காற்று வீசியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஒரு பாலத்தை தாண்டிப் புகையிரதம் சென்றபோது விபத்துக்குள்ளானது. தண்ட வாளத்தை விட்டு விலகிய புகையிரதம் அருகிலுள்ள பன்றி பண்ணை கட்டடத்தில் மோதியுள்ளது. இதில் அக்கட்டடமும் சேதமடைந்துள்ளது.

யப்பானின் வடக்குப் பகுதியில் ஏற்கனவே கடுங்குளிர் மற்றும் பனிப் பாறைகள் சரிந்து விழுந்ததில் ஆறு பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.

## சீனாவில் கேளிக்கை விடுதியில் தீ; 25 பேர் உடல் கருகிப் பலி

(பீஜிங்)

சீனாவில் கேளிக்கை விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 25 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர். 11 பேர் எரிகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

குவாங் டாங் மாகாணத்திலுள்ள சாங்சாங் நகரிலுள்ள விடுதியில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் நடந்து கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விடுதியின் அனைத்து வாசல்களுக்கும் தீ பரவியதால் உள்ளே இருந்தவர்கள் வெளியே தப்பி ஓட முடியவில்லை. இந்தத் தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

சீனாவில் சுரங்க விபத்துக்கள் அதிகரித்து வருவது போல் விடுதிகள், வைத்தியசாலைகளில் தீ விபத்து அதிகரித்து வருகிறது. கடந்த ஜூன் மாதமும் ஷான்டோவ் நகரில் ஒரு விடுதியில் நடந்த தீ விபத்தில் 31 பேர் உடல் கருகிப் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூன்று செயற்கைக் கோள்களை ரஷ்யா விண்ணில் செலுத்தியது

(மொஸ்கோ)

ரஷ்யா மூன்று அதிநவீன செயற்கைக் கோள்களை நேற்று முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

இராணுவ மற்றும் விஞ்ஞான ஆய்வுகள் உட்பட பல்துறை ஆய்வுகளுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

கஜகஸ்தானிலுள்ள பைக்கானூர் ஏவுகணைத்தளத்திலிருந்து மூன்று செயற்கைக் கோள்களும், பொட்டான்கே எனும் ரொக்கட் மூலம் விண்ணில் ஏவப்பட்டன. பிற்பகல் 2.00 மணியளவில் இந்த மூன்று செயற்கைக் கோள்களும், வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டதாக ரஷ்யச் செய்திகள் ஊர்ஜிதம் செய்தன.

இந்தச் செயற்கைக் கோள்கள் ஏழு ஆண்டுகள் பூமியின் நீள் வட்டப் பாதையில் சுற்றி பல்வேறு தகவல்களைப் பூமிக்கு அனுப்பவுள்ளன.

இவ்வாறுகிடைக்கும் தகவல்கள் ரஷ்யாவின் இராணுவ மற்றும் தொழில் நுட்ப ஆய்வு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

## பட்டாசு தீ விபத்து ஐந்து சிறுவர்கள் பலி

கௌதமாலாவில் கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் போது பட்டாசு வெடித்து ஐந்து சிறுவர்கள் பலியாகியுள்ளனர்.

சிறுவர்கள் பட்டாசுகொளுத்தி விளையாடிக் கொண்டிருந்தபோது அது வீட்டின் மேல் விழுந்ததில் வீடு தீப்பிடித்து அதில் சிக்கியே இவர்கள் பலியாகியுள்ளனர்.

# திருமலை பொது மருத்துவமனை ஊழியர்கள் பாதுகாப்பு வழங்கக்கோரி ஊர்வலம்



[திருமலை]

**திருகோணமலை பொது மருத்துவ மனையின், மருத்துவர்களும், ஊழியர் களும் தமக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனக்கோரி கண்டன ஊர் வலம் ஒன்றினை கடந்த சனிக்கிழமை நடத்தினர்.**

அபயபுரம் பகுதியில் மருத்துவர் ஒருவர் சிங்களவரால் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்தே இப்போராட்டம் நடத்தப்பட்டது.

பொது மருத்துவமனையில் இருந்து ஊர்வலம் மருத்துவமனை வீதி, கடற்படைத்தள வீதி, நீதிமன்ற வீதி ஊடாக வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு சென்று அங்கு மாகாண சேவைகள் துணைப் பணிப் பாளரிடம் அறிக்கை ஒன்றினைக் கையளித்தனர்.

இதன் போது வடக்கு, கிழக்கு மாகாண சுகாதார துணை ஆணையா ளர் இது குறித்து படைத்தரப்பின ருடன் கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

-வடக்கு-கிழக்கு மாகாண-

# இலக்கியநூல் பரிசுப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

2004ஆம் ஆ[illegible]ான வடக்கு கிழக்கு மாகா[illegible]க்கிய நூல் பரிசுப்போட்டி[illegible] முடிவுகளை மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் கடந்த வியாழக் கிழமை வெளியிட்டார்.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**கவிதை**

ஓவியம் வரையாத தூரிகை-ஜனாபா இஸ்ஸத்ரிஹ்றானா (அனார்) கைகளுக்குள் சிக்காத கவிதை-த.ஜெயசீலன்.

**சிறுகதை**

எங்கே மனக்கண்ணையும் திற வுங்கள்- ஆதித்தநிலா.

**நாவல்:-**

வெள்ளாவி-விமல் குழந்தைவேல்.

**நாடகம்:-**இமயம்-அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.

**பல்துறை:-**

பஞ்சமரும் , சமூகத்தொடர்பும்-அருட்திரு பெஞ்ஜமின் ஜெயராசா ஆழியவளை-கந்தசாமி முத்துராசா, தமிழ் எழுத்தின் தோற்றம்-கலாநிதி ப.புஷ்பரட்ணம், ஈழத்துக்கலைத் துறைப் பதிவுகள்-எஸ்.சிவானந்தராசா.

**உயர்கல்வி:-**

ஆசிரிய முகாமைத்துவம்-மா.சின்னத்தம்பி, முகாமைத்துவத்திற்கான தகவல் தொழில்நுட்பம்-வே.ஈஸ்வரன்.

**இலக்கிய ஆய்வும் விமர்சனமும்:-**

டானியலின் எழுத்துக்கள்-கலாநிதி செ.திருநாவுக்கரசு, ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்-கலாநிதி ம.இரகுநாதன்.

**சிறுவர் இலக்கியம்:-**

மாவீரன் புள்ளிமான்-ஒ.கே.குணநாதன். (25)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மிதிவண்டிகள்

சுனாமிப் பேரலை அனர்த்தத்தின முதலாம் ஆண்டு நிறைவை முன் னிட்டு சுனாமியால் பாதிக்கப்பட்டு கல்லாறு நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள போக்குவரத்து வசதி யற்ற மாணவர்களின் கல்வி மேம் பாட்டிற்காக மிதிவண்டிகள் வழங்கப் பட்டன. தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து கனடா நாட்டில் வாழும் கஜேந்திரனின் அனுசரணையுடன் தமிழர் சமூக பொருளாதார அபிவிரு த்தி நிறுவனத்தினால் பத்து மிதி வண்டிகள் நிறுவனத்தின் கிளி நொச்சி பணிமனையில் வைத்து வழங் கப்பட்டன.




இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு நிறு வனத்தின் நிறை வேற்றுப் பணிப் பாளர் க.செல்வ நாயகம் தலை மையில் நடை பெற்றது. மாணவ ர்களுக்கான ஈருருளி களை வைத்திய கலாநிதி பிறையன் அனுசரணை வழங்கிய கஜேந்திரன், நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப் பாளர் ஆகியோரினால் வழங்கப்பட்டன.

# விவசாயக் கடன் வழங்கல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பன்னங்கண்டி கிராம மக்களுக்கு சமாதான அபிவிருத்தி செயற் திட்ட நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் பன்னங்கண்டிக் கிராமத்தில் பத்துப்பேருக்கு விவசாயக் கடன் வழங்கப்பட்டது. இந்நிகழ்வானது அண்மையில் திட்ட இணைப்பாளர் வீதயாளன் தலைமையில் இடம்பெற்றது. இக்கடன் வழங்கலில் பத்துப்பேரு[illegible]கு தலா பத்தாயிரம் ரூபாய் படி ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப் பட்டது. இ[illegible]போன்று மாவடிக்கிராமத்தில் போருட் நிறுவனத்தினால் சுழற்சி முறைக்[illegible]க வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (12)

# திரு[illegible]லையில் துப்பாக்கிச் சூடு; இளைஞர் படுகாயம்

திருகோணமலையில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. திருகோணமலையின் புறநகர்ப்பகுதியான லிங்கநகர்ப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மயூரா (வயது 29) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்து[illegible]ளார்.

# யாழ்.வன்முறைகளைக் கண்டித்து சுவிசில் அமைதி ஒன்று கூடல்

(சூரிச்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் மீதான சிறிலங்கா இராணுவத்தின் தாக்குதலைக்கண்டித்து இன்று செவ்வாய்க்கிழமை அமைதிஒன்று கூடலை சுவிஸ் தமிழ் அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளன.

பிற்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை ஐந்து மணிவரை அமைதி ஒன்றுகூடல் நடைபெறும். சுவிஸ் தமிழ் அமைப்புக்களையும் தமிழ் மக்களையும் இந்த ஒன்று கூடலில் கலந்து கொள்ளுமாறு தமிழ் இளையோர் அமைப்பு, சுவிஸ் தமிழர் இல்லங்கள், தமிழ் மாணவர் ஒன்றியம், தமிழ் பெண்கள் அமைப்பு ஆகியவை வேண்டுகோள் விடுத்துள்ளன.

# மதுபோதையில் வாகனமோட்டியவர் வயோதிபரை மோதித்தள்ளினார்

(முள்ளியவளை)

மதுபோதையில் உந்துருளியைச் செலுத்தியவர் பாதசாரி யொருவரை பின்பக்கமாக மோதித்தள்ளினார். இச்சம்பவம் கடந்த 22ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் முள்ளியவளை பொதுச்சந்தைக்கு அண்மையாக இடம்பெற்றது.

இதில் மதுபோதையில் வாகனம் ஓட்டியவரும் வயது முதிர்ந்த பாதசாரியான வ.ஏரம்பு (வயது-84) என்பவரும் படுகாயத்துக்குள்ளாகி முள்ளியவளை அரசினர் மத்திய மருந்தகத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஆ)

# பனைசார் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி

(விசுவமடு)

பனைசார் உற்பத்திப்பொருட்களுக்கான கண்காட்சியும் பரிசில் வழங்கும் நிகழ்வும் வெகுவிரைவாக நடாத்தப்படுவதற்குத் தீர்மானித்திருப்பதால் தமிழீழ தேசமெங்கணும் பனைசார் உற்பத்திப்பொருட்களை உற்பத்தி மேற் கொள்பவர்கள், பனை வேலைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பயிற்சியாளர்களும் தமது உற்பத்திப் பொருட்களை வரும் 30ஆம் திகதிக்கு முன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகம் வட்டக்கச்சியில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வரும் 16.1.2006 ஆம் நாள் குறித்த தினத்தில் பனைசார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் போட்டியும் நடைபெறுமெனவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

# காலபோக நெற்செய்கையில் நோய்த்தாக்கம் அதிகரிப்பு

-விரைவான நடவடிக்கைக்கு அழைப்பு-

(விசுவமடு)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற் பயிரினில் நோய்த்தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2005,2006 பெரும்போக நெல் உற் பத்தியை பெருமளவான விவசாயி கள் மேற்கொள்ளாத போதிலும் 2005,2006 பெரும் போக நெல் உற்பத்தி மேற்கொண்ட விவசாயி களின் நெல் வயல்களில் நோய்ப் பூச்சித்தாக்கங்கள் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள் ளனர்.

உரிய காலத்தில் நெற் செய்கையை ஆரம்பித்த விவசாயிகளின் நெற் பயிர்கள் கதிர்வரும் நிலையில் உள்ளதால் நெற்பயிர்களில் கபில நிறத்தத்திப் பூச்சியின் தாக்கமும் சந்துகுத்தி பூச்சியின் தாக்கமும் தற்போது அதிகரித்து காணப்படுவ தாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்தும் மப்பும் மந்தாரமுமாக இருப்பதால் இப்பூச்சித்தாக்கம் மேலும் அதிகரிக்கும் என விவசாயிகள் அச் சம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இப் பூச்சித்தாக்கம் பரவலாக காணப்படு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய வர்கள் விவசாயிகளின் நெற்பயிர் களைப் பார்வையிட்டு நோயில் இருந்து பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்வரவேண்டுமென விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (46)

# நிதி ஒதுக்கீடு

(வவுனியாசெய்தியாளர்)

பெரியதம்பனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இரு மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவி ருத்தி திட்டத்தின் கீழ் 2006 ஆம் ஆண்டில் இவ் இருமாடி வகுப்பறைக் கட்டடம் கட்டப்படவுள்ளது. (10)

# சமுதாய அபிவிருத்தித்திட்ட ஆரம்பவிழா

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ் வுக்கழகத்தினால் கார்ப்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சமுதாய அபிவிருத்தித்திட்ட அறிமுக விழா கடந்த 23 ஆம் திகதி தாயக நேரம் காலை பத்து மணியளவில் பெரிய பரந்தன் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச்சேர்ந்த சி.கணேஸ்வரன் தலைமையின் கீழ் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை எல்லைப்படை மாவீரர் வீரவேங்கை வெள்ளை அவர்களின் துணைவியார் திருமதி பி.சுபிதாவினால் ஏற்றி வைக்கப் பட்டதைத் தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்த மு.பால சுப்பிரமணியத்தால் ஏற்றிவைக் கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கினை கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் சி.சிவபாதசுந்தர மும் கிராம அலுவலர் கனகராசாவும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து அறிவிப் புப்பலகையினைக்கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் திரைநீக்கம் செய்துவைத்தார். வரவேற் புரையினை சமூக பொருளாதார அபி விருத்திச்சங்கத்தலைவரும், ஆசியு ரையினை மு.பாலசுப்பிரமணியமும், தலைமையுரையினை நீர்கொட்திட்ட வெளிக்கள அலுவலர் திலீபனும், கருத்துரைகளை கிராம அபிவிருத் திச்சங்கத் தலைவரும் வழங்கிய மையைத் தொடர்ந்து சிறப்புரை யினை கண்டாவளைப்பிரதேச செய லர் சி.சத்தியசீலன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து திட்ட விளக்கவு ரையினை தமிழர் புனர்வாழ்வுக்கழ கத்தைச்சேர்ந்த கார்ப்திட்ட இணைப் பாளர் சுதர்சன் வழங்கினார். அத னைத் தொடர்ந்து மாணவர்களான தர்மிகா, சிந்துஜா,தாருகா, சதுர்சன், மாதுரி ஆகியோரின் கலைநிகழ்வு களைத் தொடர்ந்து கிராம அபி விருத்திச்சங்கப் பொருளாளர் சு.சுபி கரனின் நன்றியுரையுடன் அறிமுக விழா நிறைவுபெற்றது.


# ஆழிப்பேரலை அனர்த்த 1வது ஆண்டு நிறைவு நிகழ்வு



முல்லைத்தீவில்..
படம்-பிரதீபன்


படம்-குகன்


படம்-சுரேன்


வடமராட்சி கிழக்கில்..




படம்-சசி




புதுக்குடியிருப்பில்...


படம்-தவரெட்ணம்


கல்லாறில்..




படம்-வதனன்





படம்-செல்வா




வடமராட்சி கிழக்கில்..


அம்பாறையில்..



# இந்திய அரசியல் எதிர்கொள்ளும் சவால்கள்....

ஐக்கிய முற்போக்குகூட்டணி அரசு"யாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்" என்பதாய் நெஞ்சை நிமிர்த்தி ஒரு காரியம் செய்திருக்கின்றது. தாம் பதவியேற்ற காலம் முதல் நீரோடையும் நெருப்புச்சட்டியும் எனும் நிலையினை அனுபவித்து வந்தமையினை நிவர்த்தி செய்வதற்காக அதிரடி நடவடிக்கை என்று கூறும் நிலையினை ஏற்படுத்தி யிருக்கின்றது. என்பதில் சந்தேகமில்லை.

அந்த வகையில் மத்தியரசை சிக்கலுக்குள் தள்ளியிருந்த இரண்டு விடயங்களில் ஒன்றிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றது. அந்த விடுதலை எந்தளவுதூரம் சாத்தியம்........ எதிர்காலத்தில் எத்தகைய பாரதூரமான விவகாரங்களை தோற்றுவிக்கும் ......என்பதற்கெல்லாம் தம்மை தயார் படுத்திக்கொள்ள மத்தியரசு துணிந்துவிட்டது எனலாம்.

அந்த வகையில் மத்தியரசிற்கு இம்சையளித்த விவகாரங்கள் இரண்டு

*11 பா.உ.கள் பாராளுமன்றில் கேள்வி யெ[illegible] இலஞ்சம் பெற்றமை

*பாராளுமன்றில் வெடிகுண்டு வதந்தி.

கறைபடிந்தவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தோலுரித்துக் காட்டப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இரு அவைகளிலும் கேள்வியெழுப்புவதற்கு இலஞ்சம் பெற்றுள்ளார்கள் என்பதே இவர்கள் மீதான குற்றச்சாட்டு. இதனையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை 11 பேரும் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர் என்பது மக்களை ஆச்சரியப்பட வைத்திருக்கின்றது.

மக்கள் தம்மீது வைத்திருக்கும் நம்பிக்கையினை சிதறடிக்க போவதில்லை என்று பிரதமர் 11 பேர் மீதான பதவிபறிப்பிற்கு விளக்கம் அளித்திருக்கின்றார். ஆக... ஐக்கிய முற்போக்கு கூட்டணியரசு தம்மை கறைபடிந்தவர்கள் பட்டியலில் இருந்து விலக்குதல் அளிக்க முற்படுகின்றது என்பதே தெளிவாகின்றது.

" ஆஜ்தக்" எனும் இந்தி தொலைக்காட்சியும் கோப்ரா போஸ்ட் எனும் இணையத்தளமும் இணைந்து எவரெவர் இலஞ்சம் கொடுத்தால் தலையாட்டி பொம்மையாவார்கள் என்று இரகசியமாக திட்டம் தீட்டி பகிரங்கப்படுத்தியிருக்கின்றது.

அந்த வகையில் தான் தமது பெண் நிருபர் ஒருவர் உட்பட சிலரை அப்பாவி சிறுதொழிலதிபர்களாக பா.உ.களிடம் இவர்களை அனுப்பி வைத்தது.''நீங்கள் எங்கள் சார்பில் பாராளுமன்றில் கேள்வி கேட்க வேண்டும் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை" என்று இவர்கள் கூறவும் 11 பா.உ.கள் பண ஆசையில் கை நீட்டி விட்டனர். அது நிருபர்களின் இரகசிய வீடியோவில் பதிவாகிவிட்டது.

இதிலிருந்து ஆரம்பமானது விவகாரம். இதனை இந்தி தொலைக்காட்சி ஒளிபரப்பி விட்டது. இந்தியா முழுவதும் இந்த விவகாரம் ஒரு கலக்கு கலக்கிவிட்டது. மக்களுக்கு சேவை செய்ய வேண்டியவர்களே இப்படிக் கை நீட்டி கூசாமல் இலஞ்சம் வாங்கியமை மக்களையும் அரசியல் கட்சிகளையும் அதிர்ச்சிகுள்ளாக்கியுள்ளது.

இதனையடுத்து அவரவர் தமது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு தண்டனை வழங்குவதாகக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் இதுவரையும் எந்தக்கட்சியும் நடைமுறைப்படுத்தியதாக தெரிய வில்லை.

அந்த வகையில் பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த ஆறுபேர் இந்த லஞ்சம் வாங்கியவர்களில் அடங்குகின்றனர். எம்.கே. அன்னா பட்டேல் (மராட்டியம்) ஒய்.ஜி.மகாஜன் (மராட்டியம்) பிரதீப் காந்தி (சட்டீஸ்கர்) சுரேஷ்சந்தல் (இமாச்சல பிரதேசம்) சத்திரபால்சிங் (ஒரிசா) சந்திரபிரதாப்சிங் போன்றோர்.

இதே போல் ராம்சேவக் சிங்குவாலியர் (மாநிலங்களவை உறுப்பினர்) காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து மனோஜ்குமார் (ஜார்க்கண்ட்) ராஷ்டிரிய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர். நரேந்திரகுமார் (உத்திரபிரதேசம்) லால்சந்திரா (உத்தரபிரதேசம்) ராஜாராம்பால் (உத்தரபிரசேம்) இவர்கள் மூவரும் பகுஜன்சமாஜ் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவருமே தாங்கள் இலஞ்சம் வாங்கும் நோக்கில் செயற்படவில்லை. தங்களை பத்திரிகையாளர்கள் திட்டமிட்டு ஏமாற்றி விட்டதாக புலம்புகின்றனர்.தாம் இலஞ்சம் வாங்கவில்லை என்று அடித்துக் கூறுகின்றனர்.

அப்படியெனில் இந்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட முகங்கள் யாருடையது என்பதற்கும் இவர்கள் பதில் சொல்ல வேண்டுமல்லவா.......அதற்கு அவர்கள் வாய்திறப்பதாகத் தெரியவில்லை ஆனால் தாம் ஏமாற்றப்பட்டதாக புலம்புகின்றனர்.

11 பா.உ.களையும் தமது கட்சியிலிருந்து நீக்கியுள்ளதாக ஆரம்பத்தில் அந்தந்தக்கட்சி அறிவிப்பு செய்திருந்தது. இது நல்ல செய்தி தான்! ஆனால் இது எவ்வளவு தூரம் உண்மைத்தன்மையினை காட்டும் என்பதற்கு அளவுகோலாக மாட்டாது.

ஏனெனில் காலம் செல்லச் செல்ல இவர்கள் இலஞ்சம் பெற்றமை மறக்கடிக்கப்பட்டு மக்களும் மறந்து விடுவார்கள் இவர்கள் மீண்டும் அதே பதவிகளில் புகுந்து கொண்டாலும் மறுப்பதற்கில்லை என்பதே பேருண்மை

இதனால் தான் மக்கள் 11 பேர் மீதும் வெறுப்பும் ஐக்கியமுற்போக்கு கூட்டணியரசு மீது காழ்ப்பும் கொண்டிருக்கமுடியும். இதனை மோப்பம் பிடித்துவிட்ட மத்தியரசு இவர்களைப் பதவியிலிருந்து தூக்கி மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றது என்றுதான் கூற வேண்டும்.

ஏற்கனவே 1951 இல் இவ்வாறு ஒருசம்பவம் நடந்துள்ளது. நேரு பிரதமராக இருந்த போது மக்களிடம் பணம் பெற்றதாக மக்களவை உறுப்பினர் எச்.சி.முட்கல் என்பவர் பதவியிலிருந்து தூக்கப்பட்டிருக்கிறார் என்பதை கவனத்தில் கொண்டு தான் மத்தியரசு இவ்வாறு அதிரடி யினை ஏற்படுத்தியதோ தெரியவில்லை என லாம்.

என்றாலும் காங்கிரஸ் ஆட்சியில் இலஞ்ச ஊழலுக்கு ஆப்பு வைக்கும் முயற்சிகள் நடந்து தான் வருகின்றன என்பதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆனாலும் தற்போதைய எதிர்க் கட்சியான பாரதிய ஜனதா இதனை ஏற்றுக் கொள்வதாகத் தான் தெரியவரவில்லை ஏனோ சண்டித்தனம் செய்கின்றது என்பதே மற்றோர் உண்மையாகும்.

அடுத்து பாராளுமன்ற கட்டடத்தினுள் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக "திக்திக்" மிரட்டல் ஏற்பட்டதையடுத்து பாராளுமன்றம் மட்டுமல்ல மொத்த இந்தியாவே அல்லோலகல்லோலப்பட்டுவிட்டது. "வெடிகுண்டு பாராளுமன்றில் இருக்கின்றது" எனும் ஒற்றைவரி வாசகம் இந்திய அரசியலில் இரண்டாவது முறையாக எதிரொலித்து பாடாய்படுத்தி இருக்கின்றது.

வழமை போலவேதான் இரு அவைகளும் கடந்த வாரம் கூடியது. 11.45 மணிக்குப் பாராளுமன்றில் வெடிகுண்டு இருப்பதாக தகவல் வெளியானது. பிரதமர், மத்திய அமைச்சர்கள், மந்திரிமார், ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் அனைவரும் துண்டைக்காணோம், துணியைக் காணோம் என்பது போல் அலறியடித்து நாலா திசையும் தம் உயிரைக் கையில் கொண்டு ஓடினர். வளாகத்தின் வெளியே வந்த பின்னர் தான் அனைவரும் நிம்மதியடைந்தனர் என லாம்.

ஆனால் இரண்டு முறை மோப்ப நாய்கள் சகிதம் இராணுவம், வெடிகுண்டு நிபுணர்கள் சோதனையிட்டபோதும் வெடிகுண்டு சங்கதி எதுவுமே அகப்படவில்லை என்றாலும் காலை தொடங்கிய பதற்றம் மாலை மூன்று மணிவரை பாராளுமன்றை ஆட்டிப்படைத்ததென்னமோ உண்மைதான்.

ஏனெனில் தொலைநகலூடாக அனுப்பப்பட்ட செய்தி அத்தகைய கனதி வாய்ந்ததாக இருந்தது தான் காரணம் எனலாம். "சென்னையிலுள்ள அமெரிக்கத்தூதரகம் புதுடில்லியிலுள்ள பாராளுமன்றம் இரண்டையும் ஒரே நேரத்தில் 11.46 மணிக்குத் தாக்கவுள்ளோம் முடிந்தால் தடுத்துக்கொள்ளுங்கள் அமெரிக்காவுடனான தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளுங்கள் நீண்ட நாள் வாழட்டும் ஒசாமாபின்லேடன் அசதுல்லா அல்காலிஸ் இத்தகைய செய்தி சென்னையி லிருந்தா நெல்லையில் இருந்தா வந்தது... யார் அனுப்பியது..... தனி நபரா... கூட்டமா... என்றெல்லாம் மத்திய பொலிசார் சல்லடைபோட்டுத் தேடி வருகின்றனர். இதில் குற்றவாளி இனம் காணப்படுவாரா... என்பதைவிடவும் வேறு ஒரு சங்கதியும் இதிலுள்ளதை காணமுடியும்.

இந்தத் தகவல் பலவிதமான சர்ச்சைகளைக் கோடிட்டுக் காட்டத்தவறவில்லை. அந்தவகையில் அமெரிக்காவுடனான இந்திய உறவுகளை இந்தியர்கள் யாரோ விரும்ப வில்லை. அதனால்தான் அமெரிக்காவுடனான உறவுகளைத் துண்டித்துக்கொள்ளுங்கள் என்று எச்சரிக்கை விடப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே 2001-டிசம்பர் 13 இல் இவ்வாறு பாராளுமன்றில் வெடிகுண்டு வெடித்ததில் பலர் உயிரிழந்திருக்கின்றனர். அப்போதைய பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி போன்றவர்கள் பாராளுமன்றிலிருந்து வெளிவந்து விட்டனர். பாதுகாப்புப்படையினர் பலியாகிய சம்பவம் ஏற்கனவே நடந்திருக்கின்றது.

எனவே அத்தகைய காலப்பகுதியில் இவ்வாறான மிரட்டல் அனைவரையும் கதிகலங்கடித்ததில் ஆச்சரியமெதுவுமில்லை.என்றாலும் இந்தியாவை கலங்கடிக்கத் துணிந்தவர், தனி நபராக இருக்கப்போவதில்லை நிச்சயம் கூட்டமாகக் கூட இருக்கமுடியும். அதுவல்ல முக்கியம் அமெரிக்காவுடனான இந்திய உறவுகள் குறித்த கேள்வியும் முக்கியம்

ஏற்கனவே இடதுசாரிகள் அமெரிக்காவுடனான உறவுகளுக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றமை நாமறிந்ததே!

அது மட்டுமன்றி இடதுசாரிகளின் போராட்டமும் தொடர் அறிக்கைகளும் மத்தியரசிற்கு கொடுத்துவரும் ஆதரவைத் திரும்பப்பெறுவோம் எனும் எச்சரிக்கையும் பிரபல்யமானவையே.

எனவே இடதுசாரிகளின் கொள்கையினை ஏற்றுக்கொள்பவர்கள் கூட இத்தகைய எச்சரிக்கை விடப்பட்டிருக்கலாமே(?).

அதனால் யார் இந்த வெடிகுண்டு கலாச்சாரத்தைப் பரப்பினார்கள் என்று புலன் விசாரிக்கும் மத்தியரசு அதற்கான காரணத்தையும் புலனறிய வேண்டும். ஏனெனில் எல்லாவற்றையும் நாட்டின் நலன்கருதி ஆழமாக இறங்க வேண்டும். 2001 டிசம்பர் சம்பவங்கள் இனி இந்தியஅரசியலில் மீண்டும் தடம் பதிக்க விடலாகாது.

ஏற்கனவே வாஜ்பாய் அரசு வெடிகுண்டு விவகாரத்தால் தடுமாறி இருக்கின்றது. பாகிஸ்தான் தான் அதற்குக்காரணம் என்று அன்று வாஜ்பாய் அரசு கூறி தப்பிக்கொண்டது. இவ்வாறே தற்போதைய அரசும் ஏதாவது சாக்குப்போக்குக் கூறி தப்பிக்கொள்ளலாம் ஆயினும் அவர்களுக்கும் உண்மைகளை தெரிய வேண்டும்.

**அ.கலைவாணி**

இல்லையேல் எதிர்க்கட்சி இதனை விவகாரமான விவகாரமாக மாற்றிவிடும். ஏனெனில் 11 பா.உ.களில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆறுபேர் என்பது பிரதான விடயமாக இருக்கின்றதே!. எது எப்படியோ.... கறைபடிந்தவர்கள் தூக்கி வீசப்பட்டிருக்கின்றனர். மீண்டும் இவ்வாறு ஊழல் ஏற்படாமல் இருப்பதற்கு இவர்கள் பாட மாக அமைந்தால் இந்திய மக்கள் புண்ணியம் செய்தவர்களாகத் தான் இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.



சுரேஷ்சந்தல் | ராம்சேவக்சிங் | ராஜாராம் பால் | ஒய்.ஜி.மகாஜன் | மனோஜ்குமார் | நரேந்திரகுமார்

ஊழலால் பதவியிழந்தோர்..



லால்சந்திரகோல் | ப்ரதீப் காந்தி | அன்னா பாட்மல் | சந்திர ப்ரதாப் சிங் | சத்திரபால் சிங்



மக்களவை வெடிகுண்டுப் புரளியை அடுத்து மோப்ப நாய்களுடன் உட்புகும் வெடிகுண்டு நிபுணர்கள்




**இன்றைய** நிலையில் விளையாட்டுத்துறையில் கிளிநொச்சி மாவட்டம் முன்னர் இருந்த நிலையில் இருந்து நாம் எதிர்பாராத அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளதை எவராலும் மறுக்கமுடியாது. அந்தவகையில் நோக்குகின்றபோது இன்று உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய இரண்டு விளையாட்டுக்களும் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

இவற்றுடன் ஒப்பு நோக்குகின்ற போது கரப்பந்தாட்டம் மிகவும் ஒரு பின்தங்கிய நிலையில் இருப்பதும் ஒரு வேதனைக்குரிய உண்மை. இவ்வாறு கரப்பந்தாட்டம் பின்னடைவைச் சந்திப்பற்கு



காரணம் என்ன என்பதை ஆராய்ந்தால் கரப்பந்தாட்டப்போட்டிகள் எமது மாவட்டத்தில் நடாத்தப்படாமையே ஒரு பெரும் காரணியாக அமைகின்றது. போட்டிகளை நடாத்துவதற்கு பங்குபற்றும் அணிகள் போதாத நிலையுள்ளது என்பது உண்மைதான். இருந்தபோதிலும் இனிவரும் காலங்களிலும் போட்டிகளை நடாத்தாதுவிடுவது கிளி மாவட்டத்தின் கரப்பந்தாட்டம் மறைந்துபோகும்நிலையே உருவாகும். கடந்தகாலங்களைவிட தற்போது கழகங்கள் போட்டிகளை நடாத்துவதில் பெரும் அக்கறைகாட்டி வருகின்றபோதும் கரப்பந்தாட்டத்தை தவிர்த்தே வருகின்றமை நாம் கண்டுகொண்டிருக்கின்ற உண்மை. இந்த வகையில் பார்த்தால் சென்ற ஆண்டு உருத்திரபுரம் சந்திரோதயா விளையாட்டுக்கழகம் மட்டும் ஒரு கரப்பந்தாட்டப் போட்டியை நடாத்தியது. இந்த ஆண்டு கிளிநொச்சிமாவட்ட விளையாட்டுத்துறையும், உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகமும் உதயநகர் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகமும் தலா ஒவ்வொரு போட்டிகளை நடாத்தியுள்ளது. ஏனைய கழகங்களும் போட்டிகளை நடாத்துவோரும் இதனை பாராமுகமாக இருந்து வருவது வேதனைக்குரியது. இதில் கரப்பந்தாட்டம் ஆடிவருகின்ற அணிகளாவது வருடம் தோறும் போட்டிகளை நடாத்த முன்வருவதில்லை என்பதும் ஒரு வேதனைக்குரிய விடயமாகும். எனவே போட்டிகளை நடாத்தும் கழகங்கள் கரப்பந்தாட்டப் போட்டிகளையும் நடாத்தவேண்டும்என்பதே கரப்பந்தாட்ட வீரர்களது அவாவாகும். தொடர்போட்டிகளை நடாத்திவர பங்குபற்றும் அணிகளது எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு உதாரணமாக 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் நடாத்தப்பட்ட (துடுப்பாட்ட) கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் நான்கு தொடக்கம் எட்டுக்கு உட்பட்ட அணிகளே பங்கு பற்றிவந்தன. அதனைத் தொடர்ந்து 2004 ஆம் ஆண்டு கிளி.விளையாட்டுத்துறையால் மாவீரர் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட போட்டியில் 16 அணிகளும், பூநிதா ஞாபகார்த்தமாக கனகபுரம் நடாத்திய போட்டியில் 18 அணிகளும் அடுத்து மேஜர்துளசிஞாபகார்த்தமாக நியூஸ்ரார் நடாத்திய போட்டியில் 22 அணிகளும், விசுவமடு வர்த்தகர் சங்கம் நடாத்திய போட்டியில் 28 அணிகளும் பங்குபற்றி வருவதைக் குறிப்பிடலாம். இது தொடர்ந்து போட்டிகள் நடாத்துவதன் வெளிப்பாடேயாகும்.

இவ்வாறு கரப்பந்தாட்டப்போட்டிகளை நடாத்தினால் அணிகள் வீரர்கள், தொகைபெருகி மாவட்ட,மாகாண, தேசிய மட்டத்தில் சாதிக்கமுடியும். எமது மண்ணில் வலுவுள்ள, திறனுள்ள வீரர்களுக்கு குறைவில்லை என்பதற்குச் சான்றாக சிறுவர் இல்லங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப்போட்டியைப் பார்த்தோர் புரிந்திருப்பர் அவ்வணிகள ஒவ்வொன்றும் தமது திறன்களை சிறந்த முறையில் வெளிப்படுத்தினர். இந்தளவிற்கு சிறந்த அணிகள் இங்குள்ளனவா என எண்ணுமளவிற்கு சிறந்த வீரர்கள் காணப்பட்டனர். இவ்வணிகளுக்கு சிறிதுகாலம் பயிற்சி அளிப்பதன் மூலம் பெரும் அணிகளுக்கெல்லாம் சவாலாக விளங்கக்கூடிய அணியை உருவாக்கலாம் என்பதில் ஐயமாத நம்பிக்கையை அவர்களது ஆட்டம் எமக்கு உணர்த்தியது. இவர்கள் மீதும் எமது பார்வையைச் செலுத்தி அவர்களை வெளிக்கொணர்ந்து சிறந்த அணிகளையும், வீரர்களையும் உருவாக்குவதற்கு ஆவலாகவும் அவா ...ம் சில மூத்தவீரர்கள் தங்கள் பங்களிப்பைச் செய்யத் தயாராகவுள்ளனர்.

இவ்வாறு இளைய சமூகத்தினரை வளர்த்தெடுப்பதன் மூலம் கிளிநொச்சியில் கரப்பந்தாட்டம் மட்டுமல்ல மற்றைய விளையாட்டுக்களையும் வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்லலாம் என்பது உண்மை. அத்துடன் போட்டிகளை நடாத்துபவர்கள் ஏனைய போட்டிகள் போன்று கரப்பந்தாட்டத்தையும் நடாத்தி வளர்த்தெடுக்க முன்வருவார்களா?

— சுதன்

## பாதாளத்தை நோக்கி



உலக கிரிக்கெட் அரங்கில் வேகமாக முன்னேறிய அணிகளுள் சிறிலங்கா அணியும் ஒன்றாகும்.வேகமாக முன்னேறிய சிறிலங்கா கிரிக்கெட் அணி பல தொடர் வெற்றிகளைக் குவித்ததுடன். 1996ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ணத்தையும் அவுஸ்திரேலியாவிடம் இருந்து பறித்து நாடு திரும்பியது.

இதே போட்டிக்குத் தலைமை தாங்கியவர் நட்சத்திரவீரர் அர்ஜுன ரணதுங்கவாகும். துடுப்பாட்டத்தில் மட்டுமன்றி பந்துவீச்சிலும் அவர் திறமைகாட்டி வந்துள்ளார்.

இவ்வாறு நாட்டுக்கும் கிரிக்கெட் சபைக்கும் புகழை ஈட்டித் தந்த அவர் ஓய்வு பெறும் போது சனத்ஜெயசூரியவிடம் பொறுப்பைக் கையளித்தார். அத்துடன் நின்றுவிடாமல் கிரிக்கெட்டுக்கு மேலும் தனது பணியை வழங்கும் நோக்கில் கிரிக்கெட்சபையின் தலைவர் பொறுப்பை ஏற்றார்.

அவர் தனது கடமையைச் சரிவரச் செய்து வந்த போதிலும் அணித்தலைமையில் நினைத்தமாதிரியான மாற்றங்களை தேர்வாளர் குழு செய்தது. உதாரணமாக ஜெயசூரியவிடமிருந்து தலைமைத்துவம் பறிக்கப்பட்டு மார்வன் அத்தப்பத்து, ஹசான் திலகரட்ண போன்றோரிடம் முறையே ஒரு நாள் ,டெஸ்ட் போட்டிகளுக்கான தலைமைப் பொறுப்பு கையளிக்கப்பட்டது.

பின்னர் திலகரட்ணவிடமிருந்து டெஸ்ட் போட்டித் தலைமைத்துவமும் பறிக்கப்பட்டு அத்தப்பத்துவிடம் முழுப் பொறுப்பும் வழங்கப்பட்டது. எவ்வாறேனும் அதன் பின்னர் ஓரிரு போட்டித்தொடர்களை கைப்பற்றினாலும் சிறிலங்கா அணி சராசரியான வீழ்ச்சி நிலைக்குள்ளாகி வருகின்றது. அத்துடன் அண்மையில் நட்சத்திர. சகலதுறைவீரரான ஜெயசூரிய டெஸ்ட் போட்டிகளிலிருந்தும் நீக்கப்பட்டார். அத்துடன் இந்தியாவுடனான இரு தொடர்களிலும் பாரிய தோல்வியை சந்தித்தது.

இதன் எதிரொலியாக சிறிலங்காவின் கிரிக்கெட் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணிப்பவராகக் கூறிக்கொள்ளும் அர்ஜுனரணதுங்கவும் தமது சபைத்தலைவர் பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். இவற்றை நோக்கும்போது சிறிலங்கா கிரிக்கெட் அணியின் எதிர்காலம் எதனை நோக்கிச் செல்கின்றது என அஞ்சத்தோன்றுகின்றது.

— வடிவேல்

## தெரிந்தும் தெரியாமலும்

ஒரு விளையாட்டு வீரனுக்கு வழங்கப்படும் மிகப் பெரும் தண்டனையாக போட்டியில் விளையாடுவதில் இருந்து தடைசெய்வதாகும்.

இது குறிப்பிட்ட வீரரையோ அன்றி அவர் சார்ந்த அணியையோ ஜீரணிக்க முடியாத ஒன்றாக மாற்றிவிடுகின்றது. இதற்கு உலக சாதனை வீரர் முதல் சாதாரண வீரர் வரை விதிவிலக்கல்லாமல் மாட்டிக்கொள்கின்றனர். இத்தண்டனைகள் போட்டியின் போது விதிகளை மீறுதல் முதல் ஊக்கமருந்துவரை நீண்டு செல்கின்றது.

இதில் ஊக்கமருந்து பாவித்தவருக்கு வழங்கப்படும் தண்டனை மிகக்கொடுமையானது. கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவர்களின் எதிர்காலம் என்பது பரிதாபமாக மாறிவிடுகின்றது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் வெறும் குற்றச்சாட்டு எழுந்தாலே சம்பந்தப்பட்ட வீரருக்குத் தடை விதிக்கப்படுகிறது. இப்படி கடும் கட்டுப்பாடுகள் இருந்தும் ஊக்கமருந்து வலையில் வீரர்கள் விழுந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

இவர்களைக் கேட்டால் தெரியாமல் சாப்பிட்டுவிட்டோம் என்கின்றனர். அந்தக் குறிப்பிட்ட மருந்து தடை செய்யப்பட்ட பட்டியலில் இருப்பது தெரியாது எனப் புலம்புகின்றனர். இப்பிரச்சினைக்கு என்னதான் தீர்வு?

பறக்கும் குதிரை என வர்ணிக்கப்பட்ட டிம்மொன்ட் கோமரி 2002 இல் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.78 விணாடிகளில் கடந்து உலகசாதனை படைத்தார். சமீபத்தில் இவர் ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரியவர இரண்டு ஆண்டு தடைவிதிக்கப்பட்டார்.

இந்த வெறுப்பில் தடகள நட்சத்திரம் மரியன்ஜோன்சை கைவிட்ட இவர் தடகளத்தில் இருந்தே ஓய்வு பெற்றுவிட்டார்.

இந்த சர்ச்சை முடிவதற்குள் போர்த்துக்கல் கால்பந்துவீரர் ஏபெல்சேவியருக்கு 18 மாத தடை உறுதி செய்யப்பட்டது. அடுத்து பல்கேரியாவின் 16 வயது இளம்டென்னிஸ் வீராங்கனை செசில் கரண்ட்சேவா, நான்டிரோலின் என்ற ஊக்கமருந்தைப் பயன்படுத்தியதாக பிடிபட்டார். அடுத்து ஆர்ஜென்டினா வீரர் மரியானோ புயர்ட்டோ சிக்கினார். இவர் மீது இரண்டாவது முறையாக ஊக்கமருந்துக் குற்றச்சாட்டு எழ எட்டு ஆண்டுகள் போட்டிகளில் பங்கேற்கத்தடைவிதிக்கப்பட்டார். இதனால் அவரது டெனிஸ் வழக்கையே அனேகமாக முடிந்துவிட்டது.

இந்த வருடம் பிரெஞ் ஓபன் இறுதியாட்டம் வரை முன்னேறிய புயர்ட்டோ அந்த பரிசுத்தொகை முழுவதையும் திருப்பி அளித்தாக வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.





ஏற்கனவே ஆர்ஜென்டீனாவின் கிலர்மோகொரியா, கிலர்மோகேனாஸ் போன்றவர்கள் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கினர். ஆனாலும் தடையில் இருந்து தப்பினர்.

இப்படியாக ஊக்கமருந்து பாவனைக்கு அடிமையானவர்கள் ஏராளம் பேர். இவர்கள் தமது நற்பெயரைக் கெடுத்துக்கொள்வதுடன் தமது நாட்டுக்கும் அவப்பெயரைப் பெற்றுக் கொடுத்து விடுகின்றனர்.

இவர்களில் சிலர் தங்களது உடல் பலத்தை அதிகரிக்க வேண்டும் என்றே ஊக்கமருந்தைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது சரியானது தான். ஆனால் சிலர் ஜலதோஷம், காய்ச்சல் போன்றவைகளுக்காக மருந்து எடுத்துக்கொள்வர்.

அதில் தடைசெய்யப்பட்ட மருந்து அடங்கியிருக்கும் போது தெரியாமல் சிக்கிவிடுகின்றனர்.

ஆகவே தடைசெய்யப்பட்ட மருந்துப் பொருட்கள் குறித்து வீர வீராங்கனைகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் இதை செய்யப் போவது யார்?

— இ. சியான்

# புலிகளுடனான இணைத்தலைமை நாடுகளின் சந்திப்பை தடுக்கப் போராடிய சிறிலங்கா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமை நாடுகளின் தூதர்கள் சந்தித்துள்ளமை சிறிலங்கா அரசாங்கத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது..

கடந்த நான்காண்டு யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் விடுதலைப் புலிகளுடன் இணைத்தலைமை நாடுகள் மேற்கொள்ளும் முதலாவது சந்திப்பு இது.இந்தச் சந்திப்பை தடுக்கும் வகையில் கடந்த வெள்ளிக்கிழமை இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களை சிறிலங்கா பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் சந்தித்துள்ளனர்.

பேசாலையில் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்களைச் சுட்டிக்காட்டி சிறிலங்கா அரச தரப்பினர் தற்போதைய பதற்றமான சூழலில் விடுதலைப் புலிகளுடனான சந்திப்பை தவிர்க்கலாம் என்று யோசனை தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த யோசனையை இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் நிராகரித்துள்ளனர். தங்களது நாடுகளின் தலைவர்கள் விடுதலைப்புலிகளுடனான சந்திப்பை விரும்புவதாகவும்யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறிவடையும் நிலையில் இருப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் தாங்கள் பேச்சுநடத்த வேண்டியுள்ளது என்றும் இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் பதிலளித்துள்ளனர்.

இணைத்தலைமை நாடுகளின் குழுவிலுள்ள அமெரிக்கா தனது பிரதிநிதியை கிளிநொச்சிக்கு அனுப்பாமைக்கு சிறிலங்கா அரசாங்கத்தின் அழுத்தமும் காரணமாக இருக்கக் கூடும் என்றும் கொழும்பு அரசியல்நோக்கர்கள் கருதுகின்றனர்.

தமது எதிர்ப்பின் வெளிப்பாடாகவே இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் பயணம் மேற்கொள்ள விமானப்படை விமானத்தை அரசாங்கம் மறுத்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.




## துயர்பகிர்கிறோம்

தோற்றம் -04-05-1938

மறைவு -24-12- 2005

**திரு.பொன்னையா துரைராசா யோசேப்**

எமது பாலிநகர் மகாவித்தியாலயத்தின் முதல்வர் திரு.து.யேசுதானந்தர் அவர்களின் தந்தையார் திரு.பொன்னையா துரைராசா யோசேப் அவர்களின் பிரிவால்துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

*பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,*
*மு/பாலிநகர் மகாவித்தியாலயம்.*
*வவுனிக்குளம்.*

(6021)

SRI LANKA RED CROSS SOCIETY

## SRILANKA RED CROSS SOCIETY

**In cooperation with the Sri Lanka Red Cross Society, Kilinochchi Branch**

Seeks to fill the following position in its project implementation office in Kilinochchi with a person best meeting the qualifications and work experience. We offer long term contracts and an attractive remuneration package.

**PNS LIAISON OFFICER**

Duties and Responsibilities:

The job of Liaison Officer is to facilitate and arrange documentation for Red Cross delegates, vehicles, and cargo in LTTE controlled areas, to set up and maintain an office consistent with the work required, and to maintain knowledge of acquisition and import of materials.

**Qualification, Skill and Experience Requirements**

- Flexibility and ability to manage problems on his/her own
- Diplomatic and a team player
- Fluency in English as well as Tamil, with good knowledge of spoken Sinhala
- Ability to interpret and translate
- Minimum 5 years practical experience in office and administration work
- Experience of working with the Red Cross/Red Crescent movement
- Valid driver's licence
- Skill in use of computer applications for email, MS Word and Excel
- Ability to work under stress and possible long working hours.

**Deadline for applications: 31st December, 2005.**

Applications should be sent to the following address:

Hon.Chairman/Hon.Secretary
Sri Lanka Red Cross Society,
Kilinochchi branch.

(சி.13625)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அல்பிறட் அன்ரனி ஜீவாஞ்சலி (லதா)**
**அல்பிறட் அன்ரனி அனோஜீகன்**
**அல்பிறட் அன்ரனி ஜீவதர்சினி**
**ம. சிறோன்மணி**

நீ முத்தமிட்டாடிய முல்லைப்பரப்பில்
அனோஜனே! உன் அண்ணைப் பாரடா!
உன் பிறந்த நாளுக்காய் உனக்குப்
பிடித்தது வாங்கிவந்தேன் ~ நீ
பிரிந்து விட்டாய் என்றதுமே நான்
இறந்துவிட்டேன் உன்னுடனே!
உன்னையும் இழந்து ~ உன்
அன்னையும் இழந்து உறவுகள்
இழந்து நான் மட்டும் கடலோரம்!
ஓராண்டு சென்றாலும் நீங்கள்
ஓடிவருவீர்கள் என்ற
நப்பாசையுடன்.......!

அண்ணா
சு. சதானந்தன்

(7182)

## காணிதொடர்பான முக்கிய அறிவித்தல்

01. ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்களில் அரச / பொதுத்தேவைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட அரச காணிகளை எவரும் அத்துமீறி பிடிக்காத வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளுக்குரிய நிறுவனம் /திணைக்களம் /சபை தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிக்குள் விளம்பரப்பலகை ஒன்றினை மக்கள் பார்வையிடக்கூடியதாக நாட்டி காணியை அடையாளப்படுத்திப் பாதுகாக்குமாறு வேண்டுகின்றோம்.

02. ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசகாணிகளை எவரும் அத்துமீறி கையகப்படுத்தியிருப்பின் அல்லது ஆட்சிப்படுத்தியிருப்பின் அக்காணிக்குரிய நிறுவனம்/ திணைக்களம் / சபை தமது காணி என்பதற்கான ஆதாரத்துடன் அக்காணி தொடர்பான தற்போதைய நிலையையும் பொறுப்பாளர்,காணிப்பகுதி, தமிழீழ நிர்வாகசேவை நடுவப்பணியகம் ,பாரதிபுரம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

03. அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள, அனுமதிப்பத்திரம் பெறாதுள்ள காணிகளை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இக்காணி ஒன்றினை விற்கவேண்டிய அத்தியாவசியதேவை ஒருவருக்கு ஏற்படின்,அவர் அம் மாவட்டத்திற்குரிய தமிழீழ நிர்வாகசேவை காணிப்பகுதியுடன் தொடர்புகொண்டு அதன் அனுமதியினைப் பெற்றபின்னரே விற்பனைசெய்தல் வேண்டும். இவ்அறிவித்தல் வெளியிடப்படும் நாளிலிருந்து அனுமதி பெறப்படாது காணி விற்பனை செய்யப்பட்டால்,சம்பந்தப்பட்டவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**காணிப்பகுதி,**
**தமிழீழ நிர்வாகசேவை,**
**நடுவப்பணியகம், கிளிநொச்சி.**

(சி.13592)

**"தேடல்" அறிவோர் ஒன்று கூடல்**

**"இலக்கியப் பகிர்வு"**

**இடம் : கிளிநொச்சி நுண்கலைக்கல்லூரி**
**காலம்: 28-12-2005 புதன் காலை 10.00 மணி**

**சந்திப்பவர்: அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்திருக்கும் மூத்த நாடகக் கலைஞர்**

**திரு. இளைய பத்மநாதன்**

**(M.A. நாடகமும், அரங்கியலும்)**

**ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்**

**நுண்கலைப் பிரிவினர்.**

(சி-13632)

# தொழில் நுட்பக் கல்லூரி மன்னார்

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

## பயிற்சி நெறியின் விபரங்கள்

* இயந்திரவியல் தையல் பயிற்சி (Sewing)
*கணனிப் பயிற்சி (Computer)
*வீட்டு மின் இணைப்பு (Electrician)
*கட்டட நிர்மாணிப்பாளர் (Nkrd/Masonry)
*அலுமினிய இணைப்பாளர் (Aluminum Fitter)

*பயிற்சிக்காலம்:-*
மூன்று மாதம் தொடக்கம் ஆறு மாதம் வரை உள்ளகப்பயிற்சியும் மேலும் மூன்று மாதம் தொழிலுடன் இணைந்த பயிற்சியும் வழங்கப்படும்.

* தொழில் வாய்ப்பை பெற்றுத்தரக் கூடிய தரமான பயிற்சி.
* பயிற்சி முடிவில் சுயதொழில் ஆரம்பிக்கக்கூடிய ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.
* பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு வேலைக்கான உத்தரவாதம்

*இலக்கு குழு முன்னுரிமை:-*
*யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த இளைஞர், யுவதிகள்.
*குறைந்த குடும்ப வருமானத்தைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தோர்.
*விசேட தேவைக்குட்பட்டோர் (வலுவிழந்தோர்).
*பெற்றோர், கணவனை இழந்தோர்.
*சிறை மீண்டோர்

*வயதெல்லை:-*
17 தொடக்கம் 29இற்கு இடைப்பட்டோர் (பெண்களுக்கு விதிவிலக்களிக்கப்படும்)

*கல்வித்தகைமை:-*
கணனிப் பயிற்சிக்கு தரம் பத்து ஐப்பூர்த்தி செய்திருக்க வேண்டும். குறைந்தது தரம் எட்டு ஐப் பூர்த்தி செய்த எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி:- 05-01-2006

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

பொருண்மிய மதியுரையகம்
ஆண்டான்குளம்,
மன்னார்,

(சி.13655)



# கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரி ஆரம்பமாகிறது......





## "தபேலா டிப்ளோமா பயிற்சிநெறி"

காலப்பகுதி – இரண்டு வருடங்கள்

நான்கு படிமுறைகளாகப் பயிற்சிகள் இடம்பெறும் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படும் 20 மாணவர்களே பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர். புகழ்பூத்த தபேலா வித்துவான் இரா. சிவராம் அவர்கள் பயிற்சி வழங்க உள்ளார்.

விண்ணப்பங்களை 10.01.2006 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு நேரிலோ தபாலிலோ அனுப்பிவைக்கவும் நேர்முகத்தேர்வு பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**மாதாந்த பயிற்சிக் கட்டணம்:-250/=**

அதிபர்,
நுண்கலைக்கல்லூரி,
கிளிநொச்சி.

(சி.13654)


# அடுத்த ஆண்டு இந்தியப் பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கை மையம் அமைக்கப்படும்

இந்தியப் பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கை அமைப்பை நிறுவ தொழில் நுட்ப உதவிகளை அளிக்கத்தயார் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

25 நாடுகள் இணைந்து கூட்டமாக இந்தச் சுனாமி எச்சரிக்கை அமைப்பை உருவாக்க முடிவு செய்துள்ளன.

இதன்படி கடலில் அமைக்கப்படும் மிதவலைகள் மூலமாக சுனாமி ஏற்படுவதற்கான அறிகுறிகள் செயற்கைக்கோள் மூலம் பெறப்பட்டு உறுப்பு நாடுகளின் தலைநகரங்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும். இந்த எச்சரிக்கை தகவல்கள் அடிப்படையில் கடற்கரையோரங்களிலுள்ள நகரங்கள், கிராமங்களுக்குத் தகவல்கள் அனுப்பிவைக்கப்படும். எஸ்.எம்.எஸ், ஒலிபெருக்கி, தண்டோரா மூலம் சுனாமி எச்சரிக்கைத் தகவல்களை மக்களுக்கு அறிவிக்கத்திட்டமிட்டுள்ளது.

அடுத்த ஆண்டு யூன் மாதம் 30ஆம் திகதி இந்தச் சுனாமி எச்சரிக்கை அமைப்பு செயற்படத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தானில் பூமியதிர்ச்சி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில்நேற்று முன்தினம் பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. பகல் 1.02 மணிக்கு ஏற்பட்ட பூமி அதிர்ச்சியால்,தலைநகர் இஸ்லாமபாத் உட்பட வடபகுதிகள் அனைத்தும் அதிர்ந்தன. முந்தைய பூமி அதிர்ச்சியின்போது கடுமையாக பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீர் தலைநகர் முசாபராபாத் நகரிலும் பூமி அதிர்ச்சி உணரப்பட்டது.

இது ரிச்டர் அளவுகோலில் 5.2 ஆகப் பதிவானது. இந்தப் பூமி அதிர்ச்சியால்,இஸ்லாமபாத்நகரில் கட்டடங்கள் அதிர்ந்தன. ஏற்கனவே பூமி அதிர்ச்சியின் பாதிப்புகளை உணர்ந்து இருந்ததால், மக்கள் பீதி அடைந்து வீட்டை விட்டு ஓடினர். நீண்ட நேரம் தெருக்களிலேயே தங்கினர்.

# சிவசேனா துணைத்தலைவர் பீகாரில் சுட்டுக்கொலை

(புருனியா)

பீகார் மாநில சிவசேனா கட்சித்துணைத்தலைவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். காஸ்வா நகரில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றபோது இவர் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து பீகார் மாநிலத்தில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

# தீவிரவாதிகள் தாக்குதல்; 4பொலிசார் பலி

(புதுடில்லி)

புகையிரதம் ஒன்றில் வைத்து நான்குபொலிசார் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பொலிஸ்படையினருக்கு சம்பளம் வழங்குவதற்கான பணத்தினை எடுத்துச் சென்ற பொலிசார் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மலைப்பகுதியான பிரதேசம் ஒன்றில் புகையிரதம் சென்று கொண்டிருந்த போது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



தமிழகக் கடற்கரையில் சுனாமியால் இறந்த ஒருவரின் கை மட்டும் வெளியில் தெரியும்படி இருந்தது. அந்தக் கோரக் காட்சியை குறிக்கும் வகையில் கடல் மண்ணில் உருவாக்கப்பட்ட கை சிற்பம்


## கிளி/மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

"ஷெல்சோலர்" அதிகூடிய பாவனையுள்ள சூரியமின்கலம்"

03.லைற்-27500.00
05.லைற்-47500.00
07.லைற்-62500.00

உங்கள் தெரிவுக்கு உடன் நாடுங்கள்.
கிளி.மாவட்ட சி.க.கூ.சமாசம்,
பாழ்சாலை,
கிளிநொச்சி.

(7189)

# அன்ருநெல், பொலக்சிறப்பு பந்துவீச்சு மெல்பேர்னில் தென்னாபிரிக்கா அபாரம்

அவுஸ்திரேலியவின் மெல்பேர்ன் மைதானத்தில் நேற்று ஆரம்பமான தென்னாபிரிக்காவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாம் நாள் ஆட்டநேர முடிவின் போது அவுஸ்திரேலிய அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. இப்போட்டிக்கு அறிமுகமான புதிய வீரர் ஜெக்ஸ் இரண்டு ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பொலக்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் கெய்டனுடன் ஜோடிசேர்ந்த அணித்தலைவர் சிறப்பாக ஆடி 117 ஓட்டங்களைப் பெற்று ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்து ஆட்டமிழந்தார். கெய்டன் 65 ஓட்டங்களைப் பெற்றார் ஏனைய வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர். நேற்று ஆட்டநேர முடிவில் குசே ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களுடன் களத்தில் நின்றார்.







பந்து வீச்சில் தென்னபிரிக்காவின் அன்ருநெல்சிறப்பாக பந்துவீசி நான்கு விக்கெட்டுகளையும் பொலக் மூன்று விக்கெட்டுக்களையும் என்ரின ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்றுபோட்டியின் இரண்டாம் நாள்.

## இந்திய-பாக். கிரிக்கெட்தொடர் போட்டி அட்டவணை அறிவிப்பு

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

ராவிட் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் ஆடுகிறது. இவ்விரு அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் போட்டி வரும் சனவரி மாதம் 13 ஆம் திகதி லாகூரில் தொடங்குகிறது.

டெஸ்ட் போட்டித் தொடர் முடிந்த பின்னர் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் இடையே ஐந்து ஒரு நாள் போட்டி கொண்ட தொடர் நடக்கிறது. இந்த போட்டித்தொடருக்கான அட்டவணை விபரம் வருமாறு:-

பெப்ரவரி 6 முதல் ஒருநாள் போட்டி (பெஷாவர்), பெப்ரவரி 8-இரண்டாவது ஒரு நாள் போட்டி (ராவல்பிண்டி), பெப்ரவரி12-மூன்றாவது, ஒரு நாள் போட்டி (லாகூர்), பெப்ரவரி 15 நான்காவது, ஒரு நாள்போட்டி (முல்தான்), பெப்ரவரி 18-ஐந்தாவது மற்றும் கடைசிப் போட்டி (கராச்சி).


## கண்காட்சி டென்னிஸ் போட்டியில் சானியா



ஹொங்கொங் கண்காட்சி டென்னிஸ் தொடரில் சானியா மிர்சா பங்கேற்கிறார்.இந்திய வீராங்கனை சானியா கடந்த சில மாதங்களாக காயம் காரணமாக சர்வதேச போட்டிகளில் பங்கேற்கவில்லை. காயம் குணமடைந்த பின் அவர் அவுஸ்திரேலியாவில் பயிற்சி மேற்கொண்டார். பயிற்சியை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியுள்ள அவர் சனவரி-4 இல் ஹொங்கொங்கில் நடைபெறவுள்ள கண்காட்சி தொடரில் கலந்து கொள்கிறார். இத்தொடரில் வில்லியம்ஸ் சகோதரிகள் கிம் கிளைஸ்டர்ஸ் உட்பட உலகின் எட்டு முன்னணி வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள். இதைப்பற்றி அவர் கூறுகையில் சர்வதேச போட்டிகளில் மீண்டும் பங்கேற்பது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. உலகின் முன்னணி வீராங்கனைகளுடன் விளையாட நான் ஆவலாக உள்ளேன் என தெரிவித்தார்.

## நிறவெறியை தூண்டும் நோக்கில் பேசிய தென்னாபிரிக்க வீரர்களுக்கு 3 ஆண்டு தடை

நிறவெறியை தூண்டும் நோக்கில் பேசிய 20 தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர்களுக்கு அந்நாட்டு கிரிக்கெட் சபை மூன்று ஆண்டுகள் தடை விதித்துள்ளது.



நிறவெறிப் பிரச்சினை அதிகம் காணப்படும் நாடுகளில் தென்னாபிரிக்காவும் ஒன்று. இங்கு அடிக்கடி கறுப்பு வெள்ளை நிற பிரச்சினை ஏற்படுவது பெரும் புயலை கிளப்பி வருகிறது. இப்போது இது கிரிக்கெட்டிலும் நுழைந்துள்ளது. தென்னாபிரிக்காவிலுள்ள டர்பன் நகரில் கடந்த நவம்பர் 27 இல் உள்ளூர் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் நடந்தது. இதில் குருசேடர்ஸ் மற்றும் கிரிம்சன் அணிகள் மோதின.குருசேடர்ஸ் அணியில் இடம்பெற்றிருந்த வெள்ளை இனத்தை சேர்ந்த வீரர்கள் கிரிம்சன் அணியை சேர்ந்த வீரர்களை நிற வெறியைத்தூண்டும் வார்த்தைகளால் பேசியுள்ளனர். கிரிம்சன் அணியில் இந்தியாவை சேர்ந்த வீரர்களும் இடம்பெற்றிருந்தனர். இதனை தொடர்ந்து கிரிம்சன் அணியை சேர்ந்த வீரர்கள் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையிடம் முறையிட்டுள்ளனர். பிரச்சினையை விசாரித்த கிரிக்கெட் சபை "ஒழுங்குமுறைகுழு" குருசேடர்ஸ் அணியைச் சேர்ந்த 20 வீரர்களுக்கு மூன்றாண்டுகள் தடை விதித்துள்ளனர்.

## அவுஸ்திரேலிய டெஸ்ட் வீரர் லாங்கர் கவுண்டியில் ஆடவிருப்பம்

கவுண்டி போட்டிகளில் விளையாட அவுஸ்திரேலிய வீரர் லாங்கர் ஆர்வமாக உள்ளார். டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் தொடக்க ஆட்டக்காரர் லாங்கர் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் காயமடைந்தார். காயம் குணமடையாததால் இரண்டாவது டெஸ்ட்போட்டியிலிருந்து விலகியுள்ளர்.அவர் அளித்தபேட்டி ஒன்றில் கூறியதாவது, சில போட்டிகளில் விலகியிருந்தது., அதிக போட்டிகளில் விளையாடாததை போன்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. வரும் காலங்களில் டெஸ்ட் போட்டிகள் அதிகமாக இல்லாததால் கவுண்டி போட்டிகளில் விளையாட ஆர்வமாக உள்ளேன் எனத் தெரிவித்தார். இதற்கு முன் அவர் 1998 முதல் 2000வரை மிடில்செசக்ஸ் அணிக்காக விளையாடி 3,968 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

## உள்ளூர் போட்டியை தவிர்த்தார் கங்குலி
### தேர்வாளர் கிரன் மோரே அதிர்ச்சி



இந்திய அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளமுன் உள்ளூர் போட்டியில் அணித் தலைமை பதவியை ஏற்குமாறு தேர்வாளர் கிரன்மோரே கங்குலிக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

பெரும் பிரச்சினைக்கு மத்தியில் பாகிஸ்தான் சுற்றுலாவுக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட கங்குலி கர்நாடக,குஜராத் அணிகளுக்கிடையிலான ரஞ்ஜித் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதை தவிர்த்துக் கொண்டுள்ளார்.

இதனால் தான் அதிர்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்த மோரே, பாகிஸ்தான் சுற்றுலாவுக்கு முன்பு தனது திறமையை வெளிப்படுத்த கங்குலிக்கு இது தகுந்த தருணம் என்று தெரிவித்தார்.

ஆயினும் கங்குலி துதைவிட கிறிஸ்மஸ் காலத்தில் தனது குடும்பத்துடன் பொழுதைக்கழிப்பது நல்லது என்று தெரிவித்துள்ளார்.

## நியூசிலாந்துக்கு எதிராக ஒருநாள் போட்டித்தொடர் குறிப்பிடும்படியான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன்

நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் குறிப்பிடும்படியான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன் எனநம்பிக்கை தெரிவித்துள்ளார் சிறிலங்கா அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜெயசூரிய.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் டெஸ்ட் தொடரிலிருந்து அவர் நீக்கப்பட்டார். இதற்காக சிறிலங்கா முழுவதும் கண்டனக் குரல்கள் ஒலித்தன.

இதையடுத்து நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் முத்தரப்பு தொடருக்கான சிறிலங்கா அணியில் அவர் சேர்க்கப்பட்டார். இந் நிலையில் அவர் தெரிவிக்கும் போது நியூசிலாந்துக்கு எதிரான ஒரு நாள் தொடரில் ரசிகர்கள் பெருமைப்படும்படியான ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். இனிமையான நாடு நியூசிலாந்து. அங்குதான் 15 ஆண்டுகளுக்கு முன் எனது கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கினேன் அது. மறக்க முடியாத அனுபவம்

நியூசிலாந்து அணிக்கு எதிரான முந்தைய ஒரு நாள் தொடரில் நிறைய வெற்றிகளைப் பெற்றுள்ளோம். அதே மாதிரியான முயற்சி இப்போதும் தொடரும் என நம்புகிறேன்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நீக்கப்பட்டேன். அணியிலிருந்து வெளியேறுவதை யாரும் விரும்பமாட்டார்கள் என்றாலும் அந்த இடைவெளி எனது திறமையை மேம்படுத்திக் காட்ட உந்துதலாக அமைந்துள்ளது. அணிக்குத் திரும்பியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது என்றார் ஜெயசூரிய.

1996-ஆம் ஆண்டு சிறிலங்கா அணி உலகக் கோப்பையை வென்றபோது அணியில் நட்சத்திர வீரராக ஜொலித்தவர் ஜெயசூரிய. ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ளார் அவர்.

வரும் 31-ஆம் திகதி முதல் நியூசிலாந்து அணியுடன் நான்கு ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்கிறது சிறிலங்கா அணி. இது ஏற்கனவே நடைபெற்ற தொடரின் தொடர்ச்சி.

கடந்த ஆண்டு சிறிலங்காவை சுனாமி தாக்கியபோது சிறிலங்கா அணியினர் நியூசிலாந்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். பேரழிவை அறிந்ததும் போட்டியை கைவிட்டு உடனடியாக நாடு திரும்பினர். நியூசிலாந்து தொடர் முடிந்ததும் அவுஸ்திரேலியா செல்கிறது சிறிலங்கா அணி. அங்கு சனவரி 13முதல் முத்தரப்பு தொடரில் பங்கேற்கிறது. தென்னாபிரிக்கா அத் தொடரில் பங்கேற்கும் மற்றொரு நாடு.








**சிந்தனைக்கு**

எனது மக்கள் பற்றியும், எனது தேசம் பற்றியும், எனது இயக்கம் பற்றியும் நான் பெருமிதம் கொள்கிறேன்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## அடங்கிவிடப் போவதில்லை!

சிறிலங்கா ஆயுதப் படையினர் தமிழ்மக்கள் மீது தமது மிலேச்சத்தனத்தை மீண்டும் வெறித்தனத்தோடு காட்டத் தொடங்கியுள்ளனர். இந்த வகையில் யாழ். குடாநாட்டிலும், மன்னாரிலும் கடந்த வாரங்களில் பல படுகொலைகளை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் கடந்த சனிக்கிழமை ஐந்து பொதுமக்கள் விளையாட்டு அரங்கப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளை, பேசாலையிலும் கடந்த 23ஆம் திகதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் சிறு குழந்தை ஒன்றும் அடங்கியுள்ளது.

இவ்விரு சம்பவங்கள் மட்டும்தான் கடந்த வாரத்தில் நிகழ்ந்தவை என்பதல்ல, வேறு பல படுகொலைச் சம்பவங்களும், ஒடுக்குமுறைச் சம்பவங்களும் இடம்பெற்றே உள்ளன. சில அவதானிகள் இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் இராணுவத்தின் மீதான தாக்குதல் சம்பவங்களின் விளைவுகள் /பிரதிபலிப்புக்கள் எனக் கூற முனைவதுண்டு.

ஆனால், இவ்வாதம் ஏற்புடையதல்ல. அதாவது, சிங்கள ஆயுதப் படைத்தரப்பு தமிழ் மக்கள் தமது ஆதிக்கம், அதிகாரம் என்பனவற்றின்கீழ் அடிபணிந்து நடக்கவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். தமிழ் மக்கள் தமது உரிமைகள் தொடர்பாகப் பேசவோ, போராடவோ தொடங்கியதும் அவர்கள் தமது மிலேச்சத்தனத்தையும், வெறித்தனத்தையும் வெளிப்படுத்தத் தொடங்கி விடுகின்றனர் என்பதே உண்மையாகும்.

இந்த வகையிலேயே தற்பொழுது அவர்கள் தமது வெறித்தனத்தைக் காட்டத்தொடங்கியுள்ளனர். அதாவது தமிழ் மக்கள் ஆக்கிரமிப்பிற்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தத் தொடங்கியதும் அவர்கள் அராஜகத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். ஆனால், சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பின் இக்குண இயல்பு தமிழ் மக்களுக்குப் புதியதும் அல்ல. அத்தோடு தமிழ் மக்கள் இதற்குரிய பதிலடியைக் கொடுக்காமல்விட்டதும் இல்லை. விடப்போவதும் இல்லை.

சிங்கள ஆயுதப்படைத் தரப்பிடம் இருந்து மனிதாபிமானத்தையோ, சனநாயகச் செயற்பாடுகளையோ எதிர்பார்ப்பதற்குத் தமிழ் மக்கள் ஒன்றும் அறிவிலிகள் அல்ல. சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பின் கோரமுகத்தை அவர்கள் பல தடவை கண்டவர்கள். அது குறித்துப் பல தகவல்களைக் கேள்வியுற்றுமுள்ளார்கள்.

சிங்கள ஆயுதப்படைத்தரப்பு தமிழ் மக்கள் மீது தமது வெறித்தனத்தை வெளிப்படுத்துவது ஒருபுறம் இருக்கட்டும்! அவர்கள் தம்மினத்தின் மீதே தமது வெறித்தனத்தை வெளிப்படுத்தியவர்கள். 1971 இலும், 1988, 89இலும் அவர்கள் ஜே.வி.பி. கிளர்ச்சிகளை ஒடுக்க புரிந்த மிருகத்தனமான செயல்கள் அதிர்ச்சி அளிக்கத்தக்கவை.

இன்று சனநாயகம் பற்றியும், பாராளுமன்றம் பற்றியும் ஜே.வி.பி.யினர் பேசுவதற்கு சிறிலங்கா இராணுவம் அவர்களுக்குக் கொடுத்த அச்சமே காரணமாகும். அதாவது, ஜே.வி.பி.யினர் சனநாயக நீரோட்டத்தில் கலந்தமையானது ஜே.வி.பி.யினரின் சனநாயகப் பாரம்பரியத்தினாலோ, அதன்மீது கொண்டிருந்த பற்றுதலினாலோ, அவாவினாலோ அல்ல. சிறிலங்கா இராணுவம் கொடுத்த அச்சுறுத்தலினாலேயே ஆகும்.

சிறிலங்காவிலுள்ள சில ஆட்சியாளர்களும் சரி, ஜே.வி.பி. போன்ற கட்சியினரும் சரி, ஜே.வி.பி.யை அடக்கி ஒடுக்கிய இராணுவ அதிகாரிகள் சிலரும் சரி, ஜே.வி.பி.யை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது போன்று புலிகளையும், தமிழ்மக்களையும் அடக்கி விடலாம் என நம்பிக்கை கொண்டிருக்கலாம் ஏன் அவ்வாறு முடியாது என்பதுபோன்று கேள்வியையும் எழுப்பலாம்.

இதற்கென படுகொலைகள் மூலமும், அழிவு நடவடிக்கைகள் மூலமும் இவற்றை நிறைவேற்றத்தக்கவர்கள் என நம்பும் இராணுவ அதிகாரிகளையும், அரசியல் தலைவர்களையும் இவற்றிற்குப் பொறுப்பாகவும் நியமிக்கலாம். எடுத்துக்காட்டாக, ஜானக பேரேரா போன்ற படுகொலைகளுக்கு அஞ்சாத படை அதிகாரிகளையும், ரஞ்சன் விஜயரெட்ண, அனுருத்த ரத்வத்த போன்ற அரசியல் தலைவர்களையும் நியமனம் செய்யலாம்.

ஆனால், ஜே.வி.பி.யின் கிளர்ச்சியும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமும் ஒன்றல்ல என்பது மட்டுமல்ல, ஜே.வி.பி.யின் தலைமைத்துவமும் தமிழ் மக்களின் தலைமைத்துவமும் ஒன்றல்ல. இரண்டும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிடமுடியாதவை. தமிழ்மக்களின் தலைமைத்துவம் சிறிலங்கா ஆயுதப் படைகளின் அடக்குமுறையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து தெளிவான பார்வை கொண்டுள்ளது. அதை நிரூபித்துமுள்ளது.

ஆகையினால், தமிழ் மக்கள் சிந்தும் குருதிக்குச் சிறிலங்கா அரசும், அதன் ஆயுதப் படைத் தரப்பும் பதில் அளித்தே ஆக வேண்டும். அதாவது சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பின் மிலேச்சத்தனமான அடக்கு முறைக்கு ஜே.வி.பி. போன்று தமிழ் மக்களோ, விடுதலைப்புலிகளோ அடங்கிவிடப்போவதில்லை. அதற்கான பதிலடி தமிழ் மக்களால் நிச்சயம் கொடுக்கப்படும். அதற்கான காலம் வரையே தமிழ் மக்கள் இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியதாகவும் இழப்புக்களைத் தாங்க வேண்டியதாகவும் இருக்கும்.

# மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் படுகொலைக்கு தேசிய எழுச்சிப் பேரவைகள் கண்டனம்

(நமது நிருபர்)

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கம் படுகொலை செய்யப்பட்டமையை கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவைகள் கண்டித்துள்ளன.

மனித உரிமை வாதியைப் படுகொலை செய்த அரச பயங்கரவாதத்தைக் கண்டிக்கிறோம் எனக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை தொடர்பான விடயங்களில் கூடிய அக்கறை கொண்ட இவர் தாயகத்திலும் ஒரு மனித உரிமை அமைப்பைக் கட்டியெழுப்பப்பாடுபட்டவர்.

தமிழ்தேசியகூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழுவிலும் உறுப்பினராக அங்கம் வகித்து இராஜதந்திர ரீதியான தொடர்புகளை ஏற்படுத்தி தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் மனித உரிமை மீறல்களையும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான நியாயப்பாடுகளையும் சர்வதேச அரங்கில் எடுத்துக்கூறிவந்தார்.

இவரின் இத்தகைய பணிகளை நிறுத்துவது கொலையாளிகளின் நோக்கம். மனித உரிமைகள் பற்றி அதிகம் பேசும் சர்வதேச உலகம் இப்படுகொலைக்கு என்ன சொல்லப் போகின்றது என்பதனை தமிழ் மக்கள் எதிர்பார்த்தபடியே உள்ளனர்.

தமிழ் மக்களின் குரலை ஒடுக்குவதற்காகவே இத்தகைய அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. தமிழ் மக்களின் குடியிருப்பு நிலங்களில் இராணுவம் பிரசன்னமாக இருந்தபடியும், துணை இராணுவக் குழுக்களை உதவிக்கு வைத்தபடியும் இப்பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. இந்த இராணுவ, துணை இராணுவ பிரசன்னத்தை அகற்றி தமிழ்மக்கள் தமது சனநாயக வாழ்வை வாழ்வதற்கு சர்வதேச சமூகம் ஆக்கபூர்வமான நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டும். தவறின் தமிழ்மக்கள் ஆயுத ரீதியாக இதனை எதிர்கொள்வதே அவர்களுக்குள்ள ஒரேயொரு வழியாக அமைந்துவிடும் எனத் தெரிவித்தார்.

வன்முறைகள் மூலமும் தமிழினத்தை அடிபணியச் செய்ய முடியாது.

தொடர்ச்சியான வன்முறைகள் மூலமும் கொலைகள் மூலமும் வீறுகொண்டு எழுந்து நிற்கும் எம் இனத்தை அடிபணியச் செய்ய முடியாது. மன்னாரில் நால்வர் வெட்டிக் கொலை, யாழ்நகரில் ஐவர் சுட்டுக் கொலை, மட்டுநகரில் நத்தார் தின ஆராதனையின்போது புனித தேவாலயத்தினுள் புகுந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் யோசப்பரராசசிங்கம் அவர்கள் காட்டுமிராண்டித்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டமையையும் ஏனையோர் சுட்டுக்காயப்படுத்தப்பட்ட இச்செயல்களைச் செய்த அரச படைகளினதும், ஒட்டுண்ணிகளினதும் அடாவடித்தனமான செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனப் பூநகரிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் மென்மேலும் இடம்பெறின் முழுத் தமிழினமுமே வீறுகொண்டு எழுவதைத் தடுக்க முடியாது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என வவுனியா மாவட்ட தேசியஎழுச்சிப் பேரவை தெரிவித்துள்ளது. எமது தமிழர் தாயகப்பிரதேசம் எங்கும் சிறிலங்காப் படைகள் திட்டமிட்ட ரீதியில் தமது படுகொலை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. கடந்த 16 ஆம் திகதி புங்குடுதீவில் வைத்து எமது சகோதரி இளையதம்பி-தர்சினி சிறிலங்கா கடற்படையினரின் இரக்கம் அற்ற முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டதும், அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்திலும், மன்னார் மாவட்டத்திலும் எமது மக்கள் திட்டமிட்ட ரீதியில் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். இது இவ்வாறு இருக்க தமிழ தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராசசிங்கம் மட்டக்களப்பு புனித மரியாள் தேவலாயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது இனம்தெரியாதோர் என்ற போர்வையில் சிங்களப்படைகளின் முழுமையான ஒத்துழைப்புடன் ஆயுதப்படைகளின் கைக்கூலிகளால கொல்லப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எமது மண்ணில் போர் நெருக்கடி ஏற்பட்ட காலங்களில் எல்லாம் தமிழ் மக்களின் விடுதலையை நேசித்து குரல் கொடுத்த தமிழ்ப்பற்றாளருக்கு எமது அஞ்சலியைச் செலுத்திக் கொள்வதோடு, தொடர்ந்து தமிழ் மக்கள் சிங்களப் படைகளின் உயிர் படுகொலைகளில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள அனைவரும் ஆயுதம் ஏந்திப் போராடுவோம் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## கொடிகாமத்தில் கிளைமோர் குண்டு மீட்டு பயணிகள் படையினரால் நையப்புடைப்பு

(கொடிகாமம்)

கொடிகாமத்தில் கிளைமோர் குண்டொன்றை வெடிக்காத நிலையில் கண்டெடுத்த இராணுவத்தினர் ஏ.9 நெடுஞ்சாலையில் பயணித்த பொதுமக்களை நையப்புடைத்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் வேளை இந்தக் கிளைமோர் குண்டை மீட்ட படையினர் பொல்லுகளாலும், தடிகளாலும் மக்களை கண்மூடித்தனமாகத் தாக்கிய பின்னர் துப்பாக்கி வேட்டுக்களையும் படையினர் தீர்த்துள்ளனர். இதனால் அவ்வீதியூடான போக்குவரத்துச் சிறிது நேரம் தடைப்பட்டு பின்னர் சீரடைந்த போதிலும் படையினர் மக்கள் மீது தொடர்ந்தும் கெடுபிடிகளைக் காட்டியதோடு வாகனங்கள் அனைத்தும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டன. (37)

## இன்று இந்தியா செல்லும் மகிந்த ஜெயலலிதா வையும் சந்திப்பாராம்

இந்தியப் பயணம் மேற்கொள்ளும் சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் சந்திக்கவுள்ளார்.

மகிந்த தலைமையிலான குழு இன்று செவ்வாய்க்கிழமை இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்கிறது.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, றோகித போகொல்லாகம, வடிவேல் சுரேஷ், ஏ.எச்.எம். பௌசி, பேரியல் அஷ்ரப், ஹெல உறுமயவைச் சேர்ந்த உதய பிரபாத் கம்மன்வில ஆகியோரும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

புதுடில்லி செல்லும் சிறிலங்காக் குழு இந்திய சனாதிபதி அப்துல் கலாம், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகியோரைச் சந்திக்கவுள்ளனர்.

புதுடில்லிச் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு கேரளாவின் நகரான கொச்சி செல்லும் அவர்கள் அங்கு சிறிலங்காவில் முதலீடு செய்யும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பின்னர் சென்னையில் தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவை மகிந்த குழு சந்திக்கவுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இந்தியாவில் மகிந்த தலைமையிலான குழுவுடன் இணைந்து கொள்வார் என்று கூறப்படுகின்றது.

ஜோசப் பரராசசிங்கத்தின் படுகொலைக்கு

## சிறிலங்கா புலனாய்வுத்துறையும் சனாதிபதியுமே பொறுப்பு

**- சர்வதேச தமிழர் கூட்டமைப்பு கண்டனம்**

மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் படுகொலைக்கு சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் சிறிலங்கா இராணுவப புலனாய்வுத் துறையும் தான் பொறுப்பு என்று சர்வதேச நாடுகளில் செயற்படும் 150 தமிழர் அமைப்புக்களின் கூட்டமைப்பான சர்வதேச தமிழர் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்.

மனித உரிமைகளின் பெயரால் சனநாயகம், மதம் மற்றும் இன நல்லிணக்கம், நீதி நேர்மை ஆகியவற்றின் பெயரால் எதுவித தாமதமுமின்றி சர்வதேச சமூகமானது தமிழ் பாராளுமன்ற உறுப்பினரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான ஜோசப் பரராசசிங்கம் அவர்களின் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்க முன்வர வேண்டும்.

நத்தார் பண்டிகை ஆராதனை நிகழ்வில் பங்கேற்றிருந்தபோது நள்ளிரவில் அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். சிறிலங்கா புலனாய்வுத்துறையினரும் அவர்களுடன் வடக்கு-கிழக்கில் சேர்ந்தியங்கும் குழுவினரும் மேற்கொண்டிருக்கும் இந்தப் படுபாதகக் குற்றச் செயலுக்கு சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷதான் பொறுப்பேற்க வேண்டும்.

இலங்கையில் அனைத்துமே அமைதியிழந்துவிட்டது. அனைத்துமே வெளிச்சத்தில் இல்லை என்று இப்போது அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தர்சினி, ஜோசப் பரராசசிங்கத்தின்
# படுகொலைகளைக் கண்டித்து கனடாவில் கூட்டம்

புங்குடுதீவில் சிங்களக் கடற்படைக் காமுகர்களினால் தர்சினி பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தையும் சிறிலங்கா புலனாய்வுத்துறையினராலும் ஒட்டுக்குழுக்களாலும் மட்டு.பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராசசிங்கம் படுகொலை செய்யப்பட்டதையும் கண்டித்து கனடாவில் புங்குடுதீவு பழைய மாணவர்களால் கண்டனக்கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கண்டனப் பொதுக்கூட்டம் நேற்று 10.30 மணியளவில் கனடா கந்தசுவாமி கோவிலில் நடைபெற்றது.

...ம் காலமாக தமிழீழ மண்ணிலே இராணுவத்தினரின் கோரப் பசிக்கு இரையாக்கப்பட்டு படுகொலை செய்யப்படும் பெண்களின் வரிசையிலே இப்பெண்ணும் அடங்கியுள்ளார். இவ்வாறான முறையிலே நடைபெறுகின்ற படுகொலைகளை உலகிற்கு தெரியப்படுத்தும் முகமாக உலக மனித உரிமைகள் அமைப்புக்களுக்கும் கனேடிய அரசிற்கும் அனைவரும் ஒருங்கிணைந்து முறையிடும் முகமாகவும் நடைபெற்ற இக்கண்டனப்பொதுக் கூட்டத்தில் புங்குடுதீவு மக்கள், மனிதாபிமானிகள், பொதுமக்களும், ஊடகவியலாளர்களும், மனித உரிமையை மதிக்கும் அனைவரும் கலந்து கொண்டனர்.

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தலைவர் தனபாலனின் தலைமையுரையையும் அதைத் தொடர்ந்து வரவேற்புரையை சந்திரகுமாரும் கண்டன உரைகளையும் பலர் நிகழ்த்தியதுடன், நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து மக்களதும் கையெழுத்து அடங்கிய மகஜர் இந்தியா, கனடா அரசாங்கங்களிற்கும் பல மனிதநேய அமைப்புக்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராசசிங்கத்தின் நினைவு அஞ்சலியும் நடைபெற்றது. இந்நிகழ்விலே அரங்கம் நிறைந்த மக்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## சுனாமி....

யும் நினைவுகூரும்முகமாக முற்பகல் 10.30 இற்கு பொதுச் சுடரினை தமிழீழ கடற்படைத் தளபதி மங்களேஸ் ஏற்றிவைக்க, தொடர்ந்து உயிரிழந்த மக்களின் உறவினர்கள் தமது உறவுகளின் கல்லறைகளுக்கு சுடர் ஏற்றினர். தொடர்ந்து. இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் முகமாக நினைவுரைகளைத் தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தூயவன் அரசறிவியல் கல்லூரி விரிவுரையாளர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர்.

இங்கு தமது உறவுகளை இழந்த மக்கள் தமது உறவுகளின் விதை குழிகளுக்கு முன்பாக வந்து தமது துயரத்தினை வெளிப்படுத்தியதைக் காணக்கூடியதாகவிருந்தது. இவ் அஞ்சலி நிகழ்வில் தமிழீழ கடற்படையின் யாழ். மாவட்டத் தளபதி கலாத்தன், தமிழீழ கடற்படையின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூரணி மற்றும் பொறுப்பாளர்கள். போராளிகள் எனப்பலரும் கலந்துகொண்டு மக்களின் துயரில் பங்கேற்றனர்.

ஆழிப்பேரலையின் கோரத்தாண்டவத்தில் பலியானோர்களின் நினைவு நிகழ்வும், பிரார்த்தனைகளும் நேற்று பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசத்தில் இடம்பெற்றது.

மல்லாவி சிவன்கோயிலில் நேற்றுக்காலை பத்து மணிக்கு ஆலயக் குருக்கள் தலைமையில் ஆறு அந்தணர்கள் ஒன்று கூடிப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதேபோன்று பாண்டியன்குளம் பிரதேசத்தில் விநாயகபுரம் சித்தி விநாயகர் ஆலயத்தில் மதியம் 12.00 மணிக்கு அப்பிரதேச மக்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதன்போது வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிர்நீத்த மக்களிற்கான அஞ்சலி நிகழ்வு புளியங்குளம் சோதனை நிலையத்துக்கு முன்பாக முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றது.

புளியங்குளம் பயணிகள் பிரிவின் ஆளுனர் அலுவர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆழிப்பேரலையால் மாண்ட மக்களின் நினைவுரையை வவுனியா மாவட்ட ஆசிரியர்கள் சார்பாக சத்தியானந்தன் ஆசிரியரும், வவுனியா மாவட்டத்தின் வெகுசன அமைப்பின் உறுப்பினரும், ஆசிரிய பயிற்சி நிலைய முகாமையாளருமான ஜெயச்சந்திரன் ஆசிரியரும், தமிழீழ கல்விக்கழகத்துணைப் பொறுப்பாளர் அருள் ஆசிரியரும் ஆற்றினர்.

இந்நிகழ்வில் பெருமளவு பொது மக்களும், ஆயப்பகுதி, போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுப் பணியாளர்களும், போராளிகள், பொறுப்பாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டு நினைவு வணக்கம் செலுத்தினர்.

சுண்டிக்குளம் கடற்பகுதியில் சுனாமி கடற்கோளால் காவு கொள்ளப்பட்ட 33 பேரது ஓராண்டு நினைவுநாள் நினைவஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் பத்து மணிக்கு கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லாறு பாடசாலையில் கண்டாவளைப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த 33 பேரது திருவுருவப்படங்களுக்கு ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து உறவினரால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டன.

நிகழ்வில் நினைவுரையினையும் சமய வழிபாட்டையும் அருட்திரு ரவிராஜ் அடிகள் மற்றும் சிவசிறி சிவலோகநாதக்குருக்கள் நிகழ்த்தினார்கள்.

அம்பாறை திருக்கோவிலில் சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்தோரின் நினைவாக திருக்கோவில் நாட்டுப்பற்றாளர் நினைவிடத்திற்கு அருகாமையில் இவ் அனர்த்தத்தில் உயிரிழந்த அனைவரினதும் பெயர்கள் பொறிக்கப்பட்டு நினைவுத்தூபி ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது. இவ் அனர்த் தத்தில் தாய், தந்தையரை இழந்த பெண்ணொருவரினால் இந்த நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

ஆழிப்பேரலைத்தாக்கத்தினால் ஓராண்டு நினைவுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று பரவலாக அனுஷ்டிக்கப்பட்டன. மாவட்டமெங்கும் பரவலாக மக்களினால் நினைவு கூரப்பட்ட இந்த ஆழிப்பேரலை நினைவு தின ஞாபகார்த்த நிகழ்வுகளில் மாவட்டமெங்கும் துக்கத்துடன் நீங்காத அந்த நாள் நினைவுகளில், மாவட்டம் முழுவதும் சோகமாகவே காடசியளித்ததுடன், துக்கத்தினை வெளிப்படுத்துமுகமாக வீடுகள், பொது இடங்கள், நிறுவனங்கள் என அனைத்து இடங்களிலும் வெள்ளை, கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டன.

ஓராண்டு நிறைவினைக்குறிக்கும் வாசகங்கள் அடங்கிய பாதாகைகளும் தொங்கவிடப்பட்டன. மட்டக்களப்பில் பிரதான ஆழிப் பேரலை நினைவு நிகழ்வுகூரல் நிகழ்ச்சி நாவலடி கிராமத்தில் நடைபெற்றுள்ளது. அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபியை மாவட்ட. அரசாங்க அதிபர் எஸ்.புண்ணிய மூர்த்தி அவர்கள் திறந்துவைத்தார்.

இறந்தவர்களின் உருவப்படங்கள் வைக்கப்படட விசேட தூபியை திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை திறந்து வைத்தார். இப்பகுதிகளில் பலியான 240 பேரின் பெயர்கள் இத்தூபியில் பதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு கரையோரப் பகுதியில் கடந்த வருடம் ஆழிப் பேரலையில் காவுகொண்ட மக்களின் ஓராண்டு நினைவும், நினைவாலயம் திறப்பு நிகழ்வுகளும் நேற்று இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் முதலாவதாக காலை 10.00 மணியளவில் முல்லை.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்திலிருந்து பேரணியுடன் ஆரம்பமானது. முல்லைத் தீவுக் கரையோரத்தில் சுனாமியால் அழிக்கப்பட்ட புனித இராயப்பர் ஆலயத்தில் அமைக்கப்பட்ட நினைவால யத்தை வந்தடைந்த பேரணியைத் தொடர்ந்து நினைவுச்சுடர் ஏற்றப் பட்டது. நினைவுச்சுடர்களை யாழ். ஆயர்தோமஸ்சௌந்தர நாயகம் ஆண்டகை,தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை, முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டாசுகுமார், மௌலவி முகமது ஆகியோர் ஏற்றினார்கள். தமிழீழத்தேசியக் கொடியினை தமிழீழ கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் ஏற்றினார். அடுத்த நிகழ்வாக நினைவாலய முகப்பு வாசலை கரைதுரைப்பற்று விசேட ஆணையாளர் இ.கிருஸ்ண பிள்ளை திறந்து வைத்தார். தொடர்ந்து நினைவுக்கற்களை இந்த நினைவாலயத்தை அமைத்த பொறியியலாளர் ஜெயசீலன், முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் அ.மரியராசா ஆகியோர் திரைநீக்கம் செய்து வைத்தார்கள். நினைவாலயத்தினை யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து இறந்தவர்களின் நினைவாக திருப்பலி பூசை, இந்துமத வழிபாடுகள் என்பன இடம்பெற்றன. வழிபாடு களைத் தொடர்ந்து நினைவுரைகள் இடம் பெற்றன.

ஆழிப்பேரலையால் சாவடைந்த மக்களில் புதுக்குடியிருப்பில் புதைக்கப்பட்டவர்களுக்கான நினைவுச் சதுக்க திறப்பு விழாவும், நினைவு நிகழ்வும் நேற்று மாலை 4.00 மணிக்கு புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் ஐயனார் கோவிலுக்கு அண்மையில் அமைக்கப்பட்ட நினைவுச் சதுக்கத்தில் நடை பெற்றது.

புதுக்குடியிருப்பு தேசியஎழுச்சிப் பேரவைச் செயலாளர் தா.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் செ.தயானந்தா ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை அரசியல் துறைப் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கள் ஏற்றிவைத்தார்.

நினைவுச்சதுக்க பெயர்ப் பலகையினை புதுக்குடியிருப்பு வணிகர் கழகப் போசகர் பெ. கந்தசாமி திரை நீக்கம் செய்து வைத்தார். அடுத்து நினைவுச் சதுக்கத்தினை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து நினைவுச் சதுக்கத்தின் முதன்மைச்சுடரினை செம்மணன் ஏற்றி வைக்க, அடுத்த சுடர்களை உறவினர்கள் உரித்துடையோர்கள் ஏற்றி வைத்தனர்.

அடுத்து கிறிஸ்தவ மத பிரார்த்தனை இடம் பெற்றது. இதனை புதுக்குடியிருப்பு பங்குத் தந்தை ராஜசிங்கம் அடிகளார் நடாத்தினார். தொடர்ந்து இந்து சமய பிரார்த்தனையை ஆனந்தபுரம் விஷ்ணு ஆலய பிரதமகுரு இராமசாமி குருக்கள் நடாத்தினார்.

அடுத்து நினைவுரைகளை பிரதேச செயலர் தயானந்தா, மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர்.

(தீ,லோ,20,கு.08,ச,24,11)

# அ.லோகீசனின் "அலையின் வடுக்கள்" நூல்
# நேற்று முல்லைத்தீவில் வெளியீடு



சுனாமிப் பேரலைகள் முல்லையில் ஏற்படுத்திய கோரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஈழநாதம் ஊடகவியலாளர் அ.லோகீசன் எழுதிய "அலையின் வடுக்கள்" என்ற நூல் நேற்று முல்லைத்தீவில் வெளியிடப்பட்டது. நூலினை தமிழீழ கடற்படையின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் வெளியிட்டு வைத்தார்.

சுனாமியின் போது உயிரிழந்து போனவர்களின் நினைவாக முல்லைக் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் நேற்று நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் நண்பகல் 12.30 மணிக்கு வெளியீட்டு நிகழ்வு ஆரம்பமானது.

" அலையின் வடுக்கள்" நூலின் முதல்பிரதியை தமிழீழ கடற்படைச் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் வெளியிட்டு வைக்க, முல்லை. பங்குத்தந்தை அருட்திரு ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன.

சிறப்புப் பிரதிகளையும் கேணல் சூசை அவர்கள் வழங்கினார். அவற்றில் முதல் பிரதியை முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா பெற்றுக் கொண்டார். அடுத்த பிரதியை முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் பெற்றுக்கொண்டார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த கடல் புவி நடுக்கத்தால் எழுந்த கடல் பேரலைகளால் அழிந்துபோன முல்லைத் தீவின் கொடுமையான நிலையை வெளிப்படுத்தும் முகமாக சம்பவத்தில் பாதிப்படைந்தவர்கள், மீட்பு நடவடிக் கைகளை மேற்கொண்டவர்கள், அதனை நெறிப்படுத்தியவர்களின் அனுபவங்களே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

ஈழநாதம் நாளிதழில் 57 தொடர்களாக வெளிவந்த அனுபவப் பகிர்வுகள் திருத்தியமைக்கப்பட்டு 'அலையின் வடுக்கள்' என்ற நூலாக நேற்று வெளிவந்துள்ளது. (கு.தீ.20)

# சுட்டுக்கொலை

(வவுனியா)

புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திருப்பதி மாஸ்ரர் என அழைக்கப்படும் வீரப்பன் திருப்பதி (வயது-50) நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இறம்பைக்குளத்திலுள்ள புளொட முகாமிற்கு அருகே உள்ள தேநீர் கடை ஒன்றில் வைத்தே இவர் நேற்று மாலை 5.30 மணியளவில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

உந்துருளியில் வந்தவர்களினால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இவரது உதவியாளர் ஒருவரும் காயத்திற்குள்ளானதாகவும், இவர் முதலில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அனுராதபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

## பிற்போடப்பட்டுள்ளது

முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி ஆர். அவர்களின் நினைவு நாளை இன்று அனுஷ்டிக்க எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருந்தது. தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர் வரும் 30-12-2005 அன்று இடம்பெறும் எனக் கழகம் தெரிவித்துள்ளது.

## இளைஞர்..

சதீஸ்குமாரின் உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளனர். காயமடைந்த சதீஸ்குமார் ஆலையடி வேம்புப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், இவர் அம்பாறை மருத்துவமனையில் படுகாயங்களுடன் அனுமதிக் கப்பட்டுள்ளார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கேணல்..

லாளர்கள் அப்பகுதிக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பூங்கா யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (28.41.27)

## யாழ்.இல்.

உள்ளூராட்சித் திணைக்களங்கள், விவசாயத்திணைக்களங்கள், கல்வித் திணைக்களங்கள் ஆகியனவும் இயங்கவில்லை.

பொதுமக்கள் மீதும், அரசஊழியர்கள் மீதும் சிறி.படையினர் தாக்குதல் நடத்திவருகின்றனர். இதனால் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை இந்தப் பணிப்புறக்ககணிப்பு இடம் பெறும் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (28,41)

## மாமனிதர்..

கத்துக்காக மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்படும்.

மலையகமக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான், மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக கிளிநொச்சிக்கு வரவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ்.குடா..

நிலைகளில் இருந்து படையினர் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து இருப்பதாகவும், தெரிய வருகின்றது. மற்றும் யாழ். பல்கலைக்கழக சூழலில் படையினரின் எண்ணிக்கையை படைத்தரப்பு அதிகரித்து இருப்பதாகவும், தெரியவருகின்றது. இதேவேளை, நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் கொடிகாமம் பிரதேசத்தில் இடம்பெற்றபிறிதொரு கைக்குண்டு வீச்சில், பொலிசார் ஒருவர் படுகாயமடைந்ததாகத் தெரிய வருகிறது.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் உள்ள காவலரணை இலக்கு வைத்ததே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மாலை 6.30 மணியளவில் மந்திகையில் இராணுவம் மீது கைக்குண்டு வீச்சு இடம்பெற்றது. (கா)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


REERDO
கழிவு அகற்றி
அழகு சேர்ப்போம்
Oxfam
கழிவுகள்
போடும் இடம்